

# இந்து மதத்தின் இன்றைய தேவைகள்

ஆசிரியர்
ஆரையம்பதி க. சபாரெத்தினம்
(கலாபூஷணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தின் இன்றையத் தேவைகள்

ஆசிரியர்
ஆரையம்பதி க. சபாரெத்தினம்
( கலாபூஷணம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | இந்துமதத்தின் இன்றைய தேவைகள் |
| ஆசிரியர் | : | ஆரையம்பதி க. சபாரெத்தினம் |
| முதற்பதிப்பு | : | 2015 ஜனவரி |
| பதிப்புரிமை | : | திருமதி. சத்யபாமா சபாரெத்தினம் |
| அச்சுப்பதிப்பு | : | ஜெஸ்லியா அச்சகம் ஆரையம்பதி. |
| கணனி அச்சுப்பதிப்பு | : | சு. சுரேந்திரன் |
| அட்டைப்படம் (வடிவமைப்பு) | : | க. சபாரெத்தினம் |
| தாள்வகை | : | 80 கிராம் |
| மொத்தப்பக்கங்கள் | : | 70 + VII |
| விலை | : | ரூ. 180/= |
| Title | : | Hindu Mathathin Irdraya Thevaikal |
| Author | : | Arayampathy K. Sabaratnam |
| First Edition | : | 2015 January |
| Copy right | : | Mrs. Sathiyabama Sabaratnam |
| Printed by | : | Jesliya Printers Arayampathy. |
| Cover design | : | K. Sabaratnam |
| Computer Type Setting | : | S. Surenthiran |
| Paper used | : | 80 Gsm |
| Pages | : | 70 + VII |
| Price | : | Rs. 180/= |
| ISBN | : | 978-955-53426-3-6 |
| Bar code | : | 9 789555 342636 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மெய்ஞான வழிகாட்டற் கருத்தியல் நோக்கில் இந்துமதமானது பல அரிய உண்மைத்தத்துவங்களை ஐயந்திரிபுக்கிடமின்றி எடுத்தியம்பி அவற்றை மெய்ப்பட நிரூபித்துள்ளபோதிலும், பின்நாளில் அவைமுறையாக பின்பற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதில் பிறழ்வுகளை தோற்றுவித்துள்ளன.

இவற்றில் புற ஆதிக்கத்தாக்கங்களால் விளைந்தனவற்றிலும் பார்க்க அகவாதிக்கங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களே அதிகமெனக்கூறலாம்.

வேததத்துவங்களில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் விரிவாக விளக்கி கூறுவதற்காக வித்தகர்களால் கையாளப்பட்டு வந்த உத்திகளிடையே ஒருமைப்பாடோ இணக்கச்சீர்மையோ அபூர்வமாகவே காணப்பட்டன. இதன் காரணமாகத்தான் இந்துமதக்கோட்பாடுகள் அவரவர் உத்திகளுக்கேற்றாற் போல் விளக்கவுரைகளாக புனையப்பட்டு காலப்போக்கில் அவை சிக்கல் தன்மையையும் சீரழிவுகளையும் தேடித்தருமோர் நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

பொதுவாக இந்துமத அனுஸ்டான நெறிமுறைகள் என்ற பரப்பில் மட்டுமே இவ்வாறான வேறுபாடுகள் தோன்றி மலிந்திருந்த போதிலும் மெஞ்ஞானத் தத்துவங்கள் என்ற மூலக்கருத்துக்களில் எவ்வித முரண்பாடுகளையும் ஏற்படுத்தவில்லை. குறிப்பாக ஆன்மீக ஈடேற்றத்திற்கு அடிப்படைக் கருவிகளாக அமைந்துள்ள இறைவன், ஆத்மா, மலபந்தங்கள் என்ற முப்பொருள் உண்மையினை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து விளக்கி அதனூடாக ஆன்மீகத் தேடலுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகளை சிறப்பாக வரையறை செய்துள்ளது. ஆயினும் அவற்றை எல்லாம் வேரூன்றிப் படித்து பயனடைய முயல்வோருக்கு இன்று தடைக்கற்களாய் எதிர்நிற்பவைகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

01. புற்றீசல் போல் தோற்றம் பெற்று வியாபித்துள்ள எண்ணிலடங்காத் தொகையிலான மதப்பிரச்சார நூல்கள். இவை ஒவ்வொன்றும் சாதகனின் கவனத்தை ஒவ்வொரு பக்கமாக அலைக்கழிப்பதாகவே அமைந்துள்ளன.

02. தத்துவக்கருத்துக்களை விளக்கும் போது வித்தகர்கள் அவற்றால் விளையப்போகும் எதிர்கால மற்றும் மதிநுட்பம் வாய்ந்த அம்சங்களைக் கருத்தில் கொள்ளாத அணுகுமுறைகள்.

03. இன்றைய உலகியல் நவீன போக்குக்கிசைய வழிகாட்டல் ஒழுங்கமைப்பு முறைமை மெருகூட்டப்படாமையும் பழைமையையே அட்சரப்பிசகின்றி ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்ற அபிலாசையும் (உ - ம் ஆலயத்திற்கு அணிந்து செல்ல வேண்டிய உடை, நடை மற்றும் அர்ச்சனை செய்யப்படவேண்டிய மொழி என்பன)

04. நிகழ்கால நடைமுறை வாழ்க்கைக்கேற்ப ஒழுங்கமைத்து வழிகாட்டப்பட்டுள்ள பிறசமயவாதிகளின் கவர்ச்சிகரமான செயற்பாடுகளும் அவற்றின் மீது செலுத்தப்படும் ஆகர்ஷண பந்தமும்

05. வர்த்தக வாணிப முயற்சிகளில் காட்டப்படும் அதீத ஆர்வமும் வெளிப்பகட்டும் ஆன்மீக ஈடேற்ற அனுஸ்டான விதிமுறைகளில் செலுத்தத் தவறுகின்றதோர் துரதிஸ்டம்.இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் ஒவ்வொரு விவகாரமும் பரந்த அளவில் அறிவோடு கூடிய பல விளக்கங்கள் தேடலுக்குட்படுத்தியதோர் களமாக மாறி வருவது இயல்பானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுக்கெல்லாம் பொருத்தமான ஆழ்ந்த அறிவுடைய விளக்கங்கள் முன்வைக்கப்படாதவிடத்து அவர்களால் அவற்றை கிரகித்து உள்வாங்குவதில் பலத்த சந்தேகமும் தயக்கமும் நிலவுகிறது. இத்தகையதோர் நிலைப்பாட்டில்தான் இந்து மதம் அதன் உயரிய அந்தஸ்தை இழந்து நிற்கிறது. முன்பெல்லாம் எமது முன்னோர் "ஆகாது" "கூடாது" "பேய் பார்வையாக்கும்" "முடுமை" "சீதேவி" என்றெல்லாம் கூறித்தடுத்த பல விடயங்கள் இன்று அர்த்தமற்றவையாக மௌனித்துப் போய்விட்டன. இது காலத்தின் நியதி.

ஆகவே காலத்தையும் நியதிகளையும் கருத்திற் கொண்டே இந்துமததத்துவங்களின் மேலான சிறப்பினையும் அவற்றில் பொதிந்து கிடக்கும் மெய்ப்பொருளுண்மைகளையும் காரண காரியங்களின் அடிப்படையில் அறிவுபூர்வமாகச் சிந்தித்து அவற்றை ஏற்றுக்கொள்ளச் செய்யுமோர் உபாயமாகவே,

## "இந்துமதத்தின் இன்றையத் தேவைகள்"

என்ற இந்நூலை ஆக்கி உவந்தளிக்கின்றேன். இதில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள், விளக்கங்கள் இன்றைய இளம் உள்ளங்களைக் கவருமென எண்ணி நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

எதுதான் இடம்பெறமாட்டாத போதிலும் இளைஞர்களின் சிந்தனையில் இந்துமதம் பற்றியதோர் ஆய்வுத்தேடலுக்கு இந்நூல் வழிசமைக்குமெனின் அதுவே இதன் குறிக்கோள் என நினைந்து மிக்க மகிழ்ச்சியடைவேன்.

நன்றி

இவ்வண்ணம்
ஆரையம்பதி க.சபாரெத்தினம்.

177ஏ,6ம் குறுக்குத்தெரு,
செல்வாநகர்,
ஆரையம்பதி - 02 (30150)
15.10.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| அத்தியாயம் : 1 - இந்துமதம் பற்றியவை (அறிமுகம் | | 01 |
| | 1. இந்துசமயத்தின் நோக்கம் | 03 |
| | 2. கொள்கை | 04 |
| | 3. நிலையான ஆறுபொருட்கள் | 07 |
| | 4. மூலமும் பிரிவாக்கங்களும் | 08 |
| | 5. இந்துமதத்தின் பிரிவுகளும் அவற்றின் பிரமாண நூல்களும் | 10 |
| | 6. செயற்பாட்டு நடைமுறைகள் | 11 |
| | 8. தத்துவ வழிபாடு | 11 |
| | 7. கிரியாமுறை வழிபாடு | 12 |
| | 8. கதைகளும் கற்பனைகளும் சார்ந்த வழிபாடு | 12 |
| | 9. பக்திப்பாமாலைகளும் தோத்திரப்பாடல்களும் | 13 |
| | 10. ஆத்மார்த்தமான பக்திப்பரவசச் செயற்பாடுகள் | 14 |
| | 11. மதம் என்றால் என்ன? | 15 |
| | 12. இந்துமதத்தின் தனிச்சிறப்புக்கள் | 16 |
| | 13. பரிபூரணத்துவமான மதம் | 17 |
| அத்தியாயம் : 2 - இந்துசமூகத்தின் இன்றைய நிலை | | 19 |
| | 1. ஆசார சீலம் | 21 |
| | 2. மதப்பிரசாரர்கள் | 23 |
| | 3. மதமாற்றம் | 24 |
| | 4. நூல்களின் சிக்கல் தன்மை | 25 |
| | 5. சாதிப்பிரிவினை | 27 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் : 3 - ஆற்றவேண்டிய முக்கிய பணிகள் 30
1. அன்றும் இன்றும் என்றும்போல் உள்ளபணி 31
2. பரிகார நடவடிக்கைகள் 32
2. பிரசாரர்கள் தேவையில்லை 32
3. ஆலயங்களை வியாபாரத்தலமாக மாற்ற நினைக்காதீர்கள் 33

அத்தியாயம் : 4 - மெய்யியல் விளக்கங்கள் 35
1. அதிகக் கடவுளர் ஏன்? 38
2. பசித்தோர் பலர் இருக்க பாலைக் கல்லில் கொட்டுவதா? 40
4. இந்துமதத்தில் தொழில்சார் கடவுளர் 42
5. அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார் 43
6. இந்துமதமும் நாஸ்திகமும் அடிப்படையில் ஒன்றே 44
7. மதமாற்றமும் அதனைத்தடுத்து நிறுத்தும் உபாயங்களும் 47
கதை - 01 48
கதை - 02 50
8. பிரபஞ்சம் எனும் அண்டம் 52
9. இந்து சமயத்தில் இல்லாதது எது? 53
10. கற்க வேண்டிய இந்து சமய நூல்கள் 55
11. இறைவணக்கம் 58
12. பிரார்த்தனை 59

அத்தியாயம் : 5 - முடிவுரை 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 01

## இந்து மதம் பற்றியவை (அறிமுகம்)

பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு மண்ணில் நாகரீகம் முகிழ்விட்டுத் தளைத்த போது மனிதன் தன் சக்திக்கும் ஆற்றலுக்கும் அப்பால் அவனை விட வல்லமை பொருந்திய வேறு ஏதோ ஒன்று இருப்பதை உணர்ந்து கொண்டான். அந்த வல்லமையை இறைவனாக ஏற்று தன்னையும் அத்துடன் இணைத்துக் கொண்ட போதுதான் வழிபாடு தோன்றிற்று. ஆரம்பத்தில் தன்னை ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த வழிபாட்டு முறை படிப்படியாக முன்னேறி தெய்வீக அந்தஸ்த்துப் பெற்று ஆன்மீக நெறியாக பரிணமித்தது. இதுவே மதம் அல்லது சமயம் என்று அழைக்கப்படலாயிற்று. இந்த வகையில் மதம் என்ற ஒன்று உலகில தோற்றம் பெற்ற போது தாபிக்கப்பட்ட மிகப் பழைமையான சமயமாக இந்து மதத்தைக் கருதமுடியும்.

பிற மதங்கள் யாவும் அவற்றைத் தோற்றுவித்தவர்களின் பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தவேளையில் இந்துமதம் மட்டும் ஒரு விதிவிலக்காக தோற்றுவித்தவர் எவரது பெயரையும் வெளிக்காட்டாமல் “சிந்துமதம்” என்று மட்டும் அதன் பழைமையான நாகரீகம் தோன்றி வளர்ந்த சிந்து நதி தீரத்தின் பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தமையானது அப்போது வேறு மதங்கள் தோன்றிப் பரவி இருக்காததோர் நிலையை வெளிப்படுத்துகிறது. சிந்துவெளி நாகரீகமும் இந்துமதமும் தோன்றி வளர்ந்த பின்புதான் பாரததேசத்தின் பெயர் கூட இந்தியா என்றும் அதனைச் சூழ்ந்த சமுத்திரம் இந்து சமத்திரமென்றும் பெயர் பெற்றிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதம் ஆல்போல் வளர்ந்து அறுகு போல் பரந்து செழித்து ஓங்குமோர் பெருவிருட்சம். இதன் ஒவ்வொரு கிளையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆறு பெரும் சமயங்களான சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் என்பவற்றிற்கு இணையானவை.

இத்தகைய தொன்மையும் வளமும் மிக்க சமயம் இன்று பல சோதனைக்குட்பட்டு சீரழிவை நாடிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டு உணர முடிகிறது. இது ஏன்? இம்மதத்தில் புதிதாக தோன்றி அலைக்கழிக்கும் பிழைகள், தவறுகள் அல்லது குறைபாடுகள்தான் எவை? அவ்வாறாயினும் கூட அவற்றைச் சீர் செய்து கொள்ள முடியாதா? சீர் செய்ய முடியுமாக இருப்பின் பொருத்தமான நடவடிக்கைகள் தான் எவை? என்ற இன்னோரன்ன விடயங்களை ஆய்வு செய்து அவற்றிற்கான சில ஆலோசனைகளைத் தெரிவிப்பதே இந்நூலின் நோக்கமாகும்.

உலகில் தோன்றிய பிரதான மதங்களை எடுத்துப் பார்த்தால் அவற்றில் புத்தமதம் தோன்றிய காலம் கி.மு 6ம் நூற்றாண்டு. இஸ்லாம் எனப்படும் முகம்மதிய மதம் தோற்றம் பெற்ற காலம் கி.பி 6ம் நூற்றாண்டு. யூதர்களின் ஜீடைசிம் தோன்றிய காலம் கி.மு 5ம் நூற்றாண்டு சீனாவில் கொன்பீயூசியம் தோன்றிய காலம் கி.மு. 5ம் நூற்றாண்டு இவ்வாறு ஒவ்வொரு மதத்திற்கும் அவையவை தோற்றம் பெற்றதற்கான கால வரையறை மனித நாகரீக வளர்ச்சி ஏட்டில் பதியப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, அவை ஒவ்வொன்றும் தோற்றம் பெறக் காரணமாக இருந்த மகான்களின் பெயர்களும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் இத்தகைய மகான்கள் தமது மதச்சீர்திருத்த கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அம்மக்கள் நிச்சயமாக ஏதோவொரு வாழ்க்கைநெறியை அல்லது மதத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர்களாகவே இருந்திருக்கவேண்டும் என்ற சந்தேகம் கூட ஏற்படுவதும் இயல்புதானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாழ்க்கை நெறி விலாசமற்றதெனினும் அது காலத்தால் முந்தியதொரு வழிகாட்டு முறை என்ற உண்மை பழிச்சிடுகிறதல்லவா? அந்தப் பழமையான வாழ்க்கை நெறி முறைமையை ஏன் இந்து மதம் என்று கொள்ளக் கூடாது? உலகின் பெரும்பாலான இடங்களில் இன்று புதை பொருள் ஆய்வு மூலம் இந்து விக்கிரகங்களும் அதன் தொன்மைச் சான்றுகளும் கண்டெடுக்கப்பட்டு வருவதனால் இதன் உண்மையை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது?

இந்து மதம் ஏனைய மதங்களைப் போன்று அதனை உருவாக்கியவர்களின் பெயரைக் கொண்டிருக்காததற்குக் காரணம்
01) சமூக அடிப்படையில் மனித நாகரீக விழுமியங்களின் வளர்ச்சியில் இருந்து தானாகத் தோன்றியது என்பதும்
02) சிந்துநதி தீரத்தில் தோன்றி வளர்ந்த வாழ்வியல் சிறப்புக்களை கொண்டிருப்பதால் அந்நாகரீகம் தோன்றிய இடப்பெயரையே மதப் பெயராகவும் ஏற்றுக் கொண்டது என்பதும் புலனாகின்றது. ஆயினும் இதற்கு சனாதன தர்மம் என்ற பெயரே ஆரம்பத்தில் இடப்பட்டிருந்தது. எப்படி பார்த்தாலும் இந்துமதம் உலகில் தோன்றிய முதல் சமயம் என்பதற்கு வலுவான காரணங்கள் இவையாகவுள்ளன. இந்துமதத்தின் அடிப்படை அன்பு மார்க்கம் ஆகும்.

## இந்து சமயத்தின் நோக்கம்

இயல்பாகவே தோற்றம் பெற்ற உயிர்கள் யாவும் உலக போகத்தின் பால் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அதனால் ஏற்படும் விருப்பு - வெறுப்பு, மகிழ்ச்சி - துக்கம், வெற்றி - தோல்வி, நயம் - நட்டம் என்ற இலௌகீக பாசமயக்கங்களில் வீழ்ந்து பிறப்பு - இறப்பு என்ற தொடர் அல்லல் படுவதில் இருந்து நீங்கி அவற்றிற்கு மேலாக உள்ளதொரு நித்திய பரமானந்தத்தில் கலந்து முக்திப் பேறினை அடைவதற்கான வழிவகைகளை கற்பிப்பதும் பயிற்சி அளிப்பதும் இந்து மதத்தின் மூலநோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் இது இவ்வுலக வாழ்க்கையை வாழ உகந்த அறநெறிகளான இல்லறவியலையும், ஞான வாழ்க்கை வாழத்தக்கதான துறவறவியலையும் ஒருங்கே புகட்டுகிறது.

உலகம் ஒரு ஆடு களம். தோன்றி வளரும் உயிர்கள் யாவும் ஆட்டக்காரர்கள். வெற்றியும் தோல்வியும் அதன் கலை நிகழ்ச்சிகள். அவரவர் சிந்தனை, செயலூக்கம் விடாமுயற்சி என்பவற்றிற்கு ஏற்றாற்போல் வாழ்க்கை நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. ஆட்டத்தின் நுணுக்கங்களை ஆராய்ந்து அறிந்தவர்களுக்கு சாதனை என்பது வேதனையானதொன்றல்ல. இதனை எடுத்து விளக்குவதாகவே நடராசப் பெருமானின் ஊழித்தாண்டவம் இந்து சமய குறியீடாக அமைந்துள்ளது.

## கொள்கை

மனித உடல் அமைப்பை அங்கரீதியாக பாகுபடுத்திப் பார்ப்போமேயானால் அது மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து அவையவங்களை உள்ளடக்கி இருப்பதோடு அவற்றின் ஊடாக வழிச்செலுத்தும் ஐந்து புலன்களையும் அவை பெற்றுள்ளதென்பதை அறிவோம். இவை தவிர மனம் அல்லது சித்தம் என்ற ஒரு தோன்றாப் பொறிமுறையையும் கொண்டுள்ளது. இந்த மனித மனமே ஆன்ம ஈடேற்றத்திற்கும் மாயை வழி பந்த கட்டுக்களுக்கும் முக்கிய காரண கர்த்தாவாகும்.

இந்த ஐம்பொறிகளின் மூலமாகவே மனமானது பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள், காட்சிகள் அல்லது கருத்துக்கள் என்பவற்றின் மூலம் சித்தத்தில் உருவாக்கப்படும் சிந்தனைச் செயலூக்கத்தின் வழிநடந்துகொள்ள முற்படுகிறது. அவ்வாறு தொழில்படும்போது அவ்வினையானது தர்மத்தை அல்லது அதர்மத்தை சார்ந்துநிற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தர்மம் நன்மை பயக்கும் காரியம். அதர்மம் தீமை விளைக்கும் காரியம். இந்த இரு வகை தொழிற்பாடுகளாலும் உயிராகிய ஆத்மா பேறுகளை அடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை நற்பேறு, துர்ப்பேறு என்பனவாம். இவ்விரு பேறுகளும் ஆத்மார்த்த ரீதியாக பாவ புண்ணிய பயன் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. நற்பயன் நன்நிமித்தங்களாகி சுகானந்தப் பெருவாழ்வினையும் துர்ப்பயன் தீமை கலந்த அற்ப வாழ்க்கையினையும் தருகின்றன.

ஆத்மா பல பிறவிகளுக்குட்பட்டதொரு பிரபஞ்ச அலகு என்பதை மறுப்பதற்கு இல்லை. வினைப்பயன்களின் கால அளவீட்டைப் பொறுத்தவரையில் இந்துமதம் அவற்றை மூன்று கட்டங்களாக வகுத்துள்ளது. சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்பனவே அவையாகும். சஞ்சிதம் என்பது நிகழ்காலத்தில் ஆத்மா எடுத்துள்ள இப்பிறவிக்கு முன்னர் பல பிறப்புக்களின் போதும் ஆற்றி அவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட அத்தனை வினைப்பயன்களதும் கூட்டுமொத்தப்பேறாகும்.(Accumilated results). பிராப்தம் என்பது நிகழ்காலத்தில் எடுத்துள்ள இப்பிறவிக்கு நேர்முன்னரான பிறப்பில்(Just before) அடைந்துள்ள பாவ புண்ணியங்கள் ஆகும். ஆகாமியம் என்பது நிகழ்காலத்தில் தற்போது பெற்றுள்ள பிறவியின் வாயிலாக ஆற்றப்படும் பாவ புண்ணிய வினைப்பயன்கள் ஆகும். இவ்வினைப்பயன்களின் அடிப்படையில் தான் பிறவிகளோ, பிறப்பற்ற பெருவாழ்வோ இறைவனால் தீர்மானிக்கப்படுகிறது என்பது இந்துசமய கோட்பாடாகும்.

சாதாரணமாக ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள இந்துக்கள் இவற்றை நல்வினை, தீவினை என்று கூறி அவற்றில் நல்வினையானது புண்ணியத்தை அளித்து சுவர்க்கத்துக்கு வழி திறக்குமென்றும் தீவினையானது பாவத்தை சுமத்தி நரகத்துக்குத் தள்ளி விடும் என்றும் கூறுவதை நாம் அறிகிறோம். இந்துமதம் இக்கருத்தினை ஏற்றுக் கொள்கின்ற போதிலும் அதற்கு ஒருபடி மேலே சென்று அத்துவித நிலை என்று மற்றுமொரு பான்மையையும் விளக்கிக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது ஒரு ஆத்மா கூடுதலான நன்மைகளைப் புரியும் போது அது நன்நிமித்தங்களுக்குட்பட்டு மேலான சுவர்க்கத்தையும் அதிகமான பாவங்களை அல்லது தீவினைகளை புரியும் போது கீழான நரகபோகத்தையும் பெற்று துன்புறுகின்றது. ஆயினும் இவ்விரு நிலைகளிலும் ஆத்மா பிறவி என்னும் பெரும் பிணியில் இருந்து விடுபட்டுக்கொள்ளாமல் மீண்டும் மீண்டும் அது அந்த பந்த பாச வலைக்குள் சிக்கி உழன்ற வண்ணமே பிறப்பதையே தொழிலாகி இறந்து போகின்றது. அத்துவிதம் என்ற நிலையில் ஆத்மா புரிகின்ற நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வினைப்பயன்களும் சமநிலைக்கு வரும்போது சீவன் முக்த நிலைதோன்றி உலகியல் பற்று பாசம் அற்றதொரு பான்மைக்கு தள்ளப்படுவதால் அது வரை இருந்து வந்த ஈருணர்வு(Sense of duality) மாறி எங்கும் எதிலும் பரமானந்த சொருபத்தை பார்க்கும் திறன் வந்தமையும். கந்தர் அநுபூதியில் அருணகிரிநாதருக்கு முருகன் காட்டிய அத்துவித பயிற்சி "சும்மா இரு சொல் அற" என்பதாகும். ஈருணர்வு என்பது ஆத்மா இயல்பாகவே பற்றியுள்ள மல பாசங்களுக்கு கட்டுண்டு உழன்று திரிவதனால் தான் வேறு இறைவன் வேறு என்ற மாயாதோற்றமாகும். பரமாத்மாவாகிய இறைவனும் ஆத்மாவாகிய உயிரும் வேறு வேறானவையல்ல. எங்கும் எதிலும் இறைவன் இருப்பதை அறியும் நிலையே சீவன் முக்தியாகும். ஆத்மா அடைந்துள்ள பிறவிப்பிணியை போக்கிக் கொள்வதற்காகவே இறைவனில் இருந்து அது வேறாக்கப்பட்டது. மீண்டும் அது ஒன்று சேரும்(union with god) போது பிறப்பற்ற பெருவாழ்வு வந்தெய்தும் என்பதுவே இந்துமதத்தின் வழிகாட்டலாகும். வளிமண்டலத்தின் ஒருபகுதி மண்குடமொன்றினால் அதன் சுவரோட்டைக் கொண்டு வேறாகப் பிரிக்கப்பட்டிருப்பினும் அது உடையும் போது காற்று எந்தவித வேறுபாடுமின்றி மீண்டும் அவ்விடத்தை நிரப்பி ஒரே வளிமண்டலமாக வியாபித்து விடுவதைப் போலவே பிறவியடைந்துள்ள ஆத்மாவும் இறைவன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளிமண்டலத்திலிருந்து தற்காலிகமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்துமதத்தைப் பொறுத்தவரையில் சுவர்க்கமோ நரகமோ இரண்டுமே ஆத்மாவுக்கு மேலும் மேலும் பிறவிகளுக்கான ஊற்றுக்கண்ணே தவிர பரமானந்த நிலை (Ectasy) யை எய்துவது முடியாததொன்று என்று அழுத்திக் கூறுகிறது. புத்தமதத்தில் கூறப்படும் "நிப்பாண", கிறிஸ்த்தவத்தில் சொல்லப்படும் "பரடைஸ்", இஸ்லாத்தில் எடுத்துரைக்கப்படும் "மோட்சம்" என்பனவும் இந்து மதத்தில் கூறப்படும் முக்தி இன்பம் எனப்படும் பரமானந்தப் பெருவாழ்வும் வேறு வேறானவை. இறைவனோடு ஆத்மா இரண்டறக் கலந்து தாடலை போல் கூடிநிற்கும் தடமற்ற இணைவே இந் நித்திய சங்கமமாகும். தாடலை என்ற சொல் தமிழில் தாள் + தலை என்று எவ்வாறு பிரித்துப் பொருள் பெறமுடியாதோ, அவ்வாறே இந்த ஆத்ம பரமாத்ம சேர்க்கையும் எவ்வகையினாலும் பகுக்க முடியாததொன்று என்றும் விளக்கம் தருகிறது இந்து மதம்.

## நிலையான ஆறுபொருட்கள்

இந்து மத கோட்பாட்டின்படி இந்த நில உலகமோ, ஏனைய கிரகங்களோ, உயிரினங்களோ மற்றும் உலகில் தோன்றிய உயிருள்ள, உயிரற்ற வஸ்துக்கள் எவையுமோ ஏன்? பிரபஞ்சம்தானும் தொடர்ந்து இயங்கி வரும் வல்லமை அற்றவை என்றும் அவை ஊழிக்காலத்தில் அழிந்து ஒழிந்து போய் விடும் என்றும் கூறப்படுகிறது. அழிவினை எதிர்நோக்காமல் என்றும் நிலைத்து நிற்கக்கூடியவை மொத்தமாக ஆறு அம்சங்களே: அவையாவன பதியாகிய இறைவன், பசுவாகிய ஆத்மா இறைவனையும் ஆத்மாவையும் பாச வலையில் சிக்க வைத்து அலைக்கழிக்கும் மலங்களான ஆணவம், கன்மம், மாயை மற்றும் ஆத்மாவை இறைவனிடம் சேர்ப்பதற்கு துணையாக வந்து நிற்கும் திரோபதானசக்தி என்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமும் பிரிவாக்கங்களும்

இந்து மதத்தின் அடிப்படை, வேதம் என்ற பிரம்மாண நூலில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. வேதம் மனிதனால் உருவாக்கப்படாதது. இறைவன் இதனை உலகிலுள்ள தவசிரேட்டர்களான முனிபுங்கவர்கள் வாயிலாக உலகிற்கு அருளிச் செய்தான் என்பது நம்பிக்கை. இவ் வேதத்தின் உட்பொருளை அவற்றின் பாடு பொருள் நோக்கி வேத வியாசர் என்ற முக்காலமும் உணர்ந்த மகான் நான்காக வகுத்து அவற்றிற்கு முறையே இருக்கு, யசூர், சாமம், அதர்வணம், என்று பெயர் சூட்டினார் என்பது வரலாறு. இந்த வேத உட்பொருளை மையமாகக் கொண்டே இந்து மதம் எனப்படும். சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் என்ற அறு பெரும் கிளைச் சமயங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில் சிவ பெருமானை முழுமுதற்கடவுளாக ஏற்று வழிபட்டு வரும் மதமே சைவம். அதே போன்று உலக மாதாவாகிய சக்தியை முழுமுதற்கடவுளாக ஏற்றுக்கொண்ட நெறியை சாக்தம் என்றும் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டு வரும்நெறியை வைணவமென்றும் முருகனை முழுமுதற்கடவுளாகக் கொண்டுள்ளதை கௌமாரம் என்றும் சர்வசித்தி கணபதியை முழுமுதற்கடவுளாகக் கொண்டிருப்பதை காணாபத்தியம் என்றும் சூரியனை முழுமுதற்கடவுளாக வழிபாடியற்றி வருவதை சௌரம் என்றும் ஆன்மநெறிகள் ஆறாக வளர்ந்து இருந்த போதிலும் அவற்றில் இப்போது சைவம், சாக்தம், வைணவம், ஆகிய மூன்று தவிர்ந்த ஏனைய மதநெறிகள் காலத்தின் மாற்றங்களுக்குட்பட்டு வழக்கொழிந்து போய்விட்டன.

இவை தவிர ஒவ்வொரு சமயமும் தத்தமக்கு என சில கர்மானுஷ்டான நெறிமுறைகளைக்கூறும் உபவிதிகளையும் கொண்டு இருக்கின்றன. அவை முறையே சைவம்-ஆகமம், சாக்தம்-தந்திரம், வைணவம்-சுங்கிதை என்ற பெயர்களில் அமைந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சைவசமயத்திற்கு ஆகமங்கள் மொத்தம் இருபத்தெட்டு.

பொதுவாக சட்டவாக்க நடைமுறைகள் ஆரம்பத்தில் Act அல்லது ordinance என்றே உருவாக்கப்படுகின்றன. பின்னர் அதன் உள்ளார்ந்த பொருள் குறித்து நிற்கும் ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் ஏற்றாற் போல் உபவிதிகள்(Clauses) ஏற்படுத்தப்படுகின்றன. இந்த உபவிதிகள் ஒவ்வொன்றும் மேற்கூறிய பிரமாணத்தின் ஒவ்வொரு பிரிவினையும் தெளிவுபடுத்தி நடைமுறைச்சாத்தியமான திட்டக்கூறுகளாக வகிக்கப்பட்டிருக்கும். இவ்வாறே இந்துசமய பிரமாண நூலாகிய வேதமும் அதன் கிரியானுஷ்டான செயல் நோக்கில் ஆகமங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. ஆகமங்கள் பெரும்பாலும் நித்திய, நைமித்திய கருமானுஷ்டானங்களையே விளக்கிக் கூறுகின்றன. இவை தவிர வேதத்தின் கூறுபொருள் நோக்கியும் அவற்றின் விபரிப்பு நோக்கியும் பல பிரிவுகளும் இணைப்புக்களும் தோன்றியுள்ளனவெனினும் அவற்றை எல்லாம் இங்கு விபரிக்க முற்படின் அது ஒரு பரந்த செயற்பாடாக மாறி எல்லாவற்றையும் குழப்பிவிடுமோர் பணியாகவும் திசை திருப்பக் கூடும். ஆதலால் அவற்றை விடுத்து முடியுமான விடயங்களை உள்ளடக்கியதோர் அட்டவணை ஒன்றினை மட்டும் கீழே தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதத்தின் பிரிவுகளும் அவற்றின் பிரமாண நூல்களும்




(சைவம் - ஆகமங்கள்; சாக்தம் - தந்திரங்கள்; வைணவம் - சங்கிதைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| புராணங்கள் | இதிகாசங்கள் | தேவாரதிருமுறைகள் | திவ்வியபிரபந்தங்கள் | கீர்த்தனங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாட்டு நடைமுறைகள்

இந்துமதம் அதன் தத்துவங்களையும் கொள்கைகளையும் ஐந்து செயன்வழிமுறைகளால் ஆற்றி வருகின்றது. அவை கற்றோருக்கும் மற்றோருக்கும் பயன்பட ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. வேதம், ஆகமம், உபநிடதம், பிரமாணங்கள் என்பவற்றில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சாதாரண கல்வியறிவுடையோருக்கு இலகுவில் புரிந்து கொள்வது கடினமென்பதனால் அவர்களையும் இந்நீரோட்டத்தில் கலந்துகொள்ளச் செய்வதற்கு ஏதுவான புராணங்கள், இதிகாசங்கள், பக்திப்பாமாலைகள் என்ற செயலாக்கங்களையும் இந் நடைமுறைகளோடு இணைக்கப்பட்டுள்ளன.

## தத்துவ வழிபாடு

இந்துமதத்தின் முடிவான தத்துவம் இறைவன் ஒருவனே என்பதாகும். இறைவன் என்ற பரம்பொருளின் ஒரு கூறே ஆத்மாவாகும். இவை இரண்டையும் வெவ்வேறாக பிரித்து சேரவொட்டாமல் தடுத்து வைத்திருப்பது ஆத்மாவை இயல்பாகவே பற்றிப் பீடித்துள்ள மலபந்தமாகும். மலபரிபாகம் இடம்பெற்ற பின்பு ஆத்மா பரமாத்மாவுடன் கலந்து விடும். இதனையே பதி-பசு-பாசம் என்ற முப்பொருள் உண்மை விளக்கத்தால் தெளிவுபடுத்தப்படுகிறது. இந்த தத்துவ விளக்கத்தை இந்துமதம் வேதம், ஆகமங்கள், பிரமாணங்கள், உபநிடதங்கள் வாயிலாக தெளிவிக்கின்றது. இது அறிவு பூர்வமான பக்தி மார்க்கம் ஆதலால் ஞானிகளால் மட்டுமே கண்டுதெளிய முடியும். இந்நடைமுறையானது செபம், தியானம் என்ற சாதனைகளால் ஆற்றப்படத்தக்கது. இது அருவ, அருவுருவ வழிபாட்டுமுறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரியாமுறை வழிபாடு

மதததத்தவங்கள் மட்டும் தெரிந்திருந்தால் போதாது. அவற்றை செயன்முறைகள் மூலம் ஆற்றுவதனால்தான் சாதாரண சாதகன் (ordinany aspirant) ஆன்ம ஈடேற்றத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். என்ன என்ன கிரியாமுறைகளை எப்படி எப்படி ஆற்ற வேண்டும் என்ற விபரங்களை விளக்குவன ஆகமங்கள். இதன்பிரகாரம் ஆலயங்களில் பூசை, திருவிழாக்கள், அபிடேகங்கள், ஆராதனைகள், கும்பாபிடேகம், யாகம், வேள்வி என்பன பக்தியுடன் ஆகமமுறைப்படி நிறைவேற்றப்படுகின்றன. இது இந்துமதம் நம்மை அழைத்துச் செல்லும் மற்றொரு பக்தி மார்க்கமாகும்.

## கதைகளும் கற்பனையும் சார்ந்த வழிபாடு

கிரியாமுறைமை மூலம் செய்யப்படுகின்ற தொண்டுகளாலும் சேவைகளாலும் இறை உணர்வு ஏற்படுமெனினும் உள்ளத்தால் உயர்ந்த பக்தியையும் அன்பையும் தூண்டி விட அவை போதாது. பிள்ளைகளுக்கு இனிப்பையும் சிற்றுண்டியையும் கொடுப்பதால் மட்டும் அவர்களை திருப்திப்பட வைக்க முடியாது. அவர்களோடு நாமும் இணைந்து அவர்களது ஒவ்வொரு செய்கையையும் வானளாவப் புகழ்ந்து பெருமைப்படுத்தினாலேயே அங்கு புரிந்துணர்வு ஏற்படும். இதே பான்மையில்தான் இறைவனது வீரதீர செயல்களையும் அவன் உயிர்களை கொடிய அரக்கர்களிடம் இருந்து மீட்ட வரலாறுகளையும் பற்றிக்கூறி அதன் மூலம் பக்தி உணர்வினை வலுப்படுத்தி கொண்டால் தான் மனம் எப்போதும் இறைநாட்டத்துடன் தொடர்ந்திருக்கும். புராணங்கள், இதிகாசங்கள் என்பவற்றில் கூறப்படும் கதைகள் மூலம் அறம், பொருள், இன்பம் என்ற மூவகை உணர்வுகளையும் ஒருசேர பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. இப்பக்திமுறை சாதாரண இறைசாதகனுக்கு இணையற்றதொரு வழிகாட்டல் நெறியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திப் பாமாலைகளும் தோத்திரப்பாடல்களும்

வேதம், ஆகமம், உபநிடதம், பிராமணங்கள் என்ற யாவும் வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் ஆக்கப்பட்டுள்ளதால் இந்துக்கோயில்கள் பலவற்றில் இம் மொழியில் அமைந்த மந்திர சுலோகங்கள் மூலமே சுவாமிக்கு அர்ச்சனை செய்யப்பட்டு வருகின்றது. பிற்காலத்தில் அதாவது பல்லவ அரசர்கள் தமிழ் நாட்டை ஆண்ட காலத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்,சுந்தரமூர்த்தியார் ஆகியவர்களது தேவாரத்திருமுறைகளும் மாணிக்கவாசகரினால் பாடப்பட்ட திருவாசகம் மற்றும் ஏனைய திருப்பதிகங்களும் தமிழில் பக்திப்பாமாலைகளாக உருவெடுத்தன. இவை வடமொழியில் உள்ள வேதாந்தத்தின் உட்பொருளை விளக்கி ஞானிகளால் அருளிச்செய்யப்பட்டவை. அதனால் இவற்றை தமிழ் வேதம் என்றும் அழைப்பர். இப்பக்தி பாமாலைகளில் கூறப்படும் உணர்வுகள் மெய்யடியார்களை மேனிசிலிர்க்கச் செய்து இறைவனிடம் கொண்டு சேர்க்க கூடிய அற்புத சக்தி பொருந்தியவை. இந்தப் பக்திப்பாமாலைகளை உரிய பண்ணோடு இசைத்து உளமுருகி இறைவன் பதம் சென்றடையும் மார்க்கமும் உண்டாதலால் இந்துமதத்தில் இந்த வகையான பக்தி முறைமையையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடமொழியில் சுவாமிக்கு அர்ச்சனை செய்வதையும் வேதபராயணங்களை அதே மொழி மூலம்இறைவனுக்கு சுலோகங்களாக சமர்ப்பிப்பதையும் தற்காலத்தில் சிலர் தவறு என்று வாதிட்டாலும் இந்துமதம் போன்ற சனாதன தர்மக்கொள்கையைக் கடைப்பிடிப்போரால் அத்தகைய வாதம் சரியானதென்று முன்மொழிய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மார்த்தமான பக்திப்பரவச செயற்பாடுகள்

எளிமையான பக்த அடியார்கள் சாத்திர, சம்பிரதாய, இந்துதத்துவ விதிமுறைகளை அறிந்திருக்காத போதிலும் இறைவன் மீது அவர்கள் கொண்ட தணியாத பக்தி மேலீட்டினால் அவ்வப்போது அவர்கள் மனதில் உதிக்கும் வாஞ்சையை முறைசாரா (Informal) வழி நின்று ஆற்றி மகிழ்வதும் உண்டு. அவை உரையாடலாக, பாடலாக, பூசையாக, ஏன் அழுகை கலந்த தூற்றலாகக் கூட அமையலாம். அத்தகைய வழிமுறைகளாகவே வீடுகளில் செய்யப்படும் பூசை, பிராத்தனைகள், சிறுதெய்வ வழிபாடுகள், அம்மானை சிந்து அகவல் போன்ற பாடல் வகைகள் அமைந்துள்ளன.

இம்முறைமையும் இந்துமதத்தில் பக்திவெளிப்பாட்டு மார்க்கங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளத்தகுந்ததே. திண்ணனார், அப்பூதிஅடிகள், நந்தனார் போன்ற மகான்களின் பக்தி வழிபாட்டு நெறிமுறைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இந்துமதம் இவ்வாறான அன்பர்களின் புதிய புதிய பக்தி அனுகுமுறைகளைக் கருத்திற்கொண்டதனாற்றானோ என்னவோ பக்தி அனுசரிப்பு முறைக்கு கட்டுப்பாடுகள் எதனையும் அது விதிக்கவில்லை. பிற்காலத்தில் இராமக்கிருஸ்ணர், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ சத்யசாயிபாவா போன்ற பல மகான்களின் வழிகாட்டல்களில் தோன்றிய பலதரப்பட்ட பக்தி மார்க்கங்களும் இவ்வகையில்தான் அடங்கும். இவை எவையும் அன்பு, சேவை

ஈகை, இரக்கம் என்ற அடிப்படை ஆன்மீக கோட்பாடுகளுக்கு ஊறு விளைவிக்காத வரையில் இந்துமதம் அவர்களையும் அரவணைத்துச் செல்வதில் எதுவித தவறும் இல்லை. எதிர்காலத்தில் கூட ஞானிகள் தோன்றி இந்துமத அடிப்படைக்கு மாறில்லாத புதிய பக்தி அனுஸ்டான முறைகளைத் தோற்றுவிக்கலாம். அவற்றையும் இந்துமதம் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்று நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதம் என்றால் என்ன?

பொதுவாக மதம் என்றால் என்ன? மனிதனை மனிதப்பண்புகளுடன் பிணைந்து வாழச்செய்வதும் அதற்கு மேல் அவன் சக்திக்கு அப்பால் உள்ள சர்வ வல்லமை பொருந்திய ஒரு உன்னத ஆற்றலை அல்லது பரம்பொருளை அறிந்து கொண்டு அதன் மூலம் தன்னைத்தானே யார் என்று உணர்ந்து கொள்ள வழிகாட்டுவதுமான ஒரு மார்க்கம் அல்லது பயிற்சிநெறி என்ற வரைவிலக்கணத்தையே மதம் என்ற சொல்லுக்கு வழங்க முடியும். ஆத்மாவை அகக்கண்களில் தோற்றுவிக்கும் உள்ளொளி மூலம் கண்டு தெளிந்து உலகப் போகங்களில் இருந்து ஒதுங்கும் வழிவகைகளை புகட்டும் ஒரு அறநெறி அதுவாகும். வாழும் வசதிகளை மட்டும் உள்ளடக்கிய வழிகாட்டல்களையோ அல்லது வாழ்க்கைக்கு அப்பால் சூன்யமாகஉள்ள மற்றொரு தேற்றத்தையோ விளக்கி கூறும் எதனையும் மதம் என்ற வரையறைக்குள் எற்றுக்கொள்ள இயலாது. மதமானது இம்மை, மறுமை ஆகிய இரண்டினையும் அவற்றோடு இணைந்த விபரங்களையும் முடிந்தளவு விரிவாகவும் விளக்கமாகவும் கூறி அவற்றைச் சென்றடையும் வழி வகைகளையும் புகட்ட வேண்டும்.

இத்தகைய நிலையில் வைத்து எண்ணிப் பார்க்கும் போது இந்துமதம் ஒரு பெரும் சிறப்புப் பெற்ற மதமாக நம்மால் காணமுடியும். எந்த மதத்திற்கும் அதனதன்பால் தனிச்சிறப்பு உண்டு. ஆயினும் இந்துமதத்தை நன்றாக துருவி ஆராய்ந்துபார்க்கும் போது அதன் சிறப்பு பன்மடங்காக வளர்ந்து நிற்பதைப் பார்க்கலாம்.
எந்த மதமானாலும் அது தனக்கென்று ஒரு பற்றற்ற தன்மையில் பரோபகார தருமம் போதிப்பதாகவே இருக்க வேண்டும். தான் செய்யும் சேவைக்கு தானமாக எதனையும் எதிர்பார்த்து நிற்பின் நிச்சயம் அதனை மதம் என்ற வரையறைக்குள் சேர்த்துக் கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியும் கற்பூரம் எவ்வாறு தனக்கென்று ஒரு தடயமும் இன்றி ஒளியாக வளம் சேர்க்கிறதோ அத்தகைய பான்மையில் தான் மதமும் தனக்கென்று எந்தப்பற்றுக்கோடையும் பேணி வரலாகாது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு."

இந்து மதமோ அதற்கென்று எதுவித ஆதாயத்தையோ எதிர்பார்ப்பையோ வைத்துக்கொண்டிருக்காமல் உள்ளதை உள்ளபடி உணர்த்துகின்ற ஒரு பெரும் மதம் ஆகையால்தான் அது தன்னைத் தழுவும்படி எவரையுமோ தழுவாதவர்களை தண்டிக்கும்படியோ யாருக்கும் கட்டளை பிறப்பிக்கவில்லை. இலௌகீக ஆதாயம் கருதி மதம் என்ற சந்தையிலே மதி மயங்கி கிடக்கும் மக்கள் என்னும் மந்தைக் கூட்டத்தை வெறும் எண்ணிக்கைக்காக கோடிக்கணக்கில் அணி சேர்த்து மார்தட்டிக் கொள்ளும் அகந்தை கூட அதற்கில்லை.

ஒரு பற்றற்ற துறவி எவ்வாறு அமைதியாக இருந்து கொண்டு இந்த உலக மக்களுக்கு அறக்கட்டளை விடுகின்றாரோ அவ்வாறே இந்து மதமும் பதியாகிய இறைவனையும் பசுவாகிய உயிர்களையும் பாசம் என்னும் உலகியல் இச்சைகளையும் விளக்கி காலம் காலமாக அழியாது நிலைத்து நிற்கும் அற்புதப் பொருளாம் பிரபஞ்ச சோதி இறைவன் என்பதை எடுத்துக் கூறுகிறது.

## இந்துமதத்தின் தனிச்சிறப்புகள்

நாம் சார்ந்த இந்துமதம் உலகத்திலேயே உயர்ந்த நெறி என்பதை நீங்கள் அறிந்து கொள்ள அதன் சித்தாந்தங்களை சற்று ஆழமாக கற்றுணர்ந்தால் அது உங்களுக்கு புரிந்து விடும்.உயர்ந்த மதம் என்று நாம் இதைக் கூறக் காரணங்கள் :

1. கட்டுப்பாட்டை எவர் மீதும் திணிக்காமல் ஆனால்; உலகியல் நீதிகளைப் பாரபட்சமின்றி பகரும் சமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இம்மை, மறுமை என்ற இருவகை வாழ்விற்கும் வழிகாட்டும் சமயம்.
3. இயற்கையின் அனுசரணையோடு பின்பற்றி வாழ ஏற்ற பல சடங்குகளையும் கொண்டாட்டங்களையும் தன்னகத்தே கொண்டிலங்கும் சமயம்.
4. எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய போதிலும் அதன் கோட்பாடுகள் இன்றைய சமூகத்திற்கும் ஏற்றாற்போல் அழுத்தமும் திருத்தமுமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள சிரஞ்சீவிகள்.
5. ஆன்மீக ஈடேற்றம் பெற விழைவோருக்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்படி மூலம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள சமயம்.
6. கடவுள் ஒருவரே என்ற மூலநெறியைக் கொண்டிருந்த போதிலும் இறைவனின் உருவங்களையும் நாமங்களையும் அன்பின் அடிப்படையில் அவதாரங்களாக எடுத்து பிரிவாக்கம் பெற்றுள்ள சமயம்.
7. தன்னை இகழவென்று ஆய்ந்து தகவல்நாடி முயல்வோரையும் அகலவொண்ணா அன்பூட்டி ஆட்கொள்ளும் சமயம்.
8. உலகம், பிரபஞ்சம், ஆத்மா என்ற நிலைக்களனை மையமாக வைத்து அபூர்வமான உண்மைகள் பலவற்றை தெளியவைக்கும் சமயம்.
9. தமக்குள்ளேயே மண்டிக் கிடக்கும் மனமயக்கு என்னும் கோலவில்லைக்கடந்து சென்று யாதுமாகிய இறைவனை உள்ளேகாண வழிகாட்டும் சமயம்.
10. மோனத்திலே ஞானத்தை உபதேசிக்கும் பேரரிய சமயம்.

## பரிபூரணத்துவமான மதம்

இந்துமதம் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு கடினமான போக்குகளைக் கொண்டுள்ள மதம் என்றோ இலௌகீக வாழ்க்கைக்கு அப்பால் சந்நியாச வாழ்விற்கு இட்டுச்செல்லும் தபசிகளின் மதம் என்றோ எண்ண நியாயமில்லை. மேலைநாட்டவர்கள் சிலரும் பிறமத நேசிப்பாளர்கள் பலரும் ஆரம்பத்தில் இத்தகையதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையேயாயினும் சுவாமி விவேகானந்தரின் உலகமத மகா சபையின் பரப்புரைக்குப் பின்னர் உலகம் இந்த உண்மையினை தெளிந்து கொண்டது.

உலகத்தில் தோன்றிய மிகப் பழமையானதும் மனிதனுக்கு தேவையான சகல ஆன்மீகத் போதனைகளையும் படிமுறையாக கொண்டுள்ளதுமான ஒரே சமயநெறி இந்துமதமேயாகும். இது பிரம்மச்சாரியம் இல்லறம் வானப்பிரஸ்தம் துறவறம் என்று வாழும் முறைகளை நான்காக வகுத்துள்ளது. எவரெவர் எந்தெந்த நிலையில் இவற்றை அனுசரித்து வாழுதல் சாலப்பொருத்தமுடையது என்பதை தெளிவாக அறிவுறுத்தியுள்ளது.

திருமணம் என்ற புனிதச் சடங்கின் அவசியத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் நுணுகி ஆராய்ந்து கூறியுள்ள அர்த்தமுள்ள ஒரே மதம் இந்துநெறிதான். அதுமட்டுமல்ல திருமணத்தின் பின்பு வாழ்வில் ஏற்படும் இன்பம், துன்பம் என்ற இருவகை உணர்வுகளையும் எவ்வாறு எதிர் கொண்டு வெற்றி கொள்ள வேண்டும் என்பதையும் அர்த்தமும் சிந்தனையும் கொண்ட சடங்குகள் மூலம் சீரிய முறையில் வடிவமைத்து தந்துள்ள மதமும் இந்து மதமன்றி வேறேதுமில்லை. இந்துமதத்தில் கூறப்பட்டுள்ள சடங்குகள், கிரியைகள் என்ற எவையுமே காட்சியோ வேடிக்கையோ மட்டுமல்ல. வாழ்க்கைத்தத்துவங்கள் அல்லது சுகாதார அனுஸ்டான சிகிச்சை முறைகள். உள வளர்ச்சிக்குக் கூட அவை பெரும் பங்காற்றுபவை.

முதன் முறையாக இல்லற வாழ்வில் பிரவேசிக்கும் ஒருவருக்குக் கூட அது முடிந்தளவு நற்போதனைகளையே உபதேசிக்கின்றது. நாள், கோள், திதி, நட் சத்திரம், சாதகப்பொருத்தம், பெற்றொர் பெரியோரது ஆசி மொழி என்ற எத்தனையோ மங்கள வாழ்த்துக்களோடுதான் ஆரம்பித்து வைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முக்கிய காரியத்தை செய்யப் புகு முன் நாம் எவ்வளவுக்கு அவதானத்துடனும் கருத்துடனும் இருக்கின்றோமோ அதே உணர்வுகளையே ஊட்டுவித்து வாழ்க்கையில் தவறு இழைத்து விடாதபடி எப்போதும் விழிப்புடன் இருக்கும் பயிற்சியை அளிக்கிறது அது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற மூச்சை உள்ளடக்கி அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்று எச்சரிக்கை வேறு செய்கிறது.

பிறப்பு, வாழ்க்கை, இறப்பு என்ற மனித ஜீவிதத்தின் முக்கிய படிகளிலெல்லாம் பல அர்த்தமுள்ள சடங்குகளைப் புகுத்தி அவை ஒவ்வொன்றுடனும் வேதபாராயண கிரியை முறைகள் மூலம் மனம், மொழி, மெய் என்பவற்றினாலும் இறையுணர்வின் மேம்பாட்டை முன்னணிக்கே கொண்டு நிறுத்துகிறது.

இல் வாழ்வில் திருப்தியற்றுப்போன அல்லது வெறுப்படைந்து விட்ட அல்லது தோற்றுப்போன பேர்களை அழைத்து "அஞ்சேல்" என்ற அபயக்கரம் நீட்டி துறவறம் என்ற மற்றொரு வகை வாழ்க்கை முறையினைக் காட்டி நிற்கிறது அது.

இத்தனை சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளஒரு சிறந்த மதத்தை பிறப்பிலிருந்தே பின்பற்றும்படியாக வாய்க்கப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். அவ்வாறு பிறந்தும் அதன் அருமை பெருமைகளை உணராது இடைநடுவில் உதறி எறிந்துவிட்டுச் செல்பவர்கள் "பாற்கலன் மேற் பூனை" என்று திருவருட்பயன் என்ற நூலில் உமாபதி சிவாச்சாரியார் கூறும் உவமானத்திற்கு மிகவும் பொருத்தமானவர்கள்.

## அத்தியாயம் 02
## இந்து சமூகத்தின் இன்றைய நிலை

இன்றைய காலகட்டத்தில் ஒரு கிறிஸ்த்தவரைப் பார்த்து "உங்கள் சமயம் என்ன? அது எதைப்பற்றிக் கூறுகிறது?" என்று கேட்டால் சற்றும் யோசிக்காமலே அவர் தனது பதிலைக் கூறிவிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இஸ்லாமியரைப்பார்த்து அதே கேள்வியைக் கேட்டாலும் அவ்வாறே அவரிடமிருந்து பதில் வருவதோடு அவரது மார்க்கத்தைப் பற்றி அழகாக நீண்ட விளக்கவுரை பகன்று விடுவார். ஆனால் ஒரு இந்துவைப்பார்த்து "நீங்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்? உங்களசமயத்தின் மூலப்பொருள் யாது? அதன் பிரமாண நூல்கள் எவை?" என்றுகேட்டு விட்டால் போதும்.

முதலில் அவர் தன்னை ஓர் இந்து என்று அறிமுகம் செய்து கொள்வதற்கே கூசுவார்! அடுத்து காலமறிந்து அவ்விடத்தை விட்டு நகர்ந்து போகவே அவகாசம் தேடுவார். இந்த நிலை எமது இந்து சமூகத்தில் மட்டும் ஏற்பட்டதற்கு காரணம் என்ன? இதுவரை நாம் சிந்தித்துப் பார்த்திருப்போமா? இல்லை என்றால் ஏன்?

ஏனைய சமூகங்களை விட இந்து சமூகமே கோயில்கள் கட்டுவதிலும் இறைவனுக்கு விழாக்கள் காண்பதிலும் இன்றும் முன்னணியில் திகழ்ந்து வருகின்ற போதிலும் அப்படி ஒரு இழி நிலை இருப்பதேன்?

"சமயங்கள் கூறுவதெல்லாம் சுத்த அபத்தம் மனிதனை சுய சிந்தனையுடனும் மரியாதையுடனும் வாழ அவைகள் ஒரு தடைக்கற்களாக இருந்து வருகின்றன." என்றெல்லாம் நாஸ்திகர்கள் கோஷம் எழுப்பிய போதிலும் இந்து மதத்தில் வலுவாகக் கூறப்பட்டுள்ள சில மூலக்கருத்துக்களை விஞ்சி அவற்றைத் தர்க்கரீதியாகக் கூடவேனும் மறுத்துரைக்கும் மனோதிடம் பெற்றவர்களாக இல்லை. பிரபஞ்சம், ஆத்மா, அணு, சித்தம், பந்தம் அல்லது கட்டு என்னும் இவற்றைப் பற்றிய இந்துமதக்கோட்பாடுகளை தவறானவை என்று நிரூபிக்கும் ஆற்றல் இன்றும் விஞ்ஞானிகளுக்கு ஏற்படவில்லை. மாறாக அவர்களின் ஒவ்வொரு கண்டு பிடிப்பும் இந்துமதத்தின் தத்துவங்களுக்கு வலுசேர்ப்பனவாகவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை சிறப்புக்களையும் யதார்த்த ரீதியான உண்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்துமதத்தை சீரழிப்பவர்கள் நிசமாகவே யாவர்?

01. இந்து என்று தம்மைக் கூறிக் கொண்டு இறுமாப்புடன் அலைந்து திரியும் இந்துமத சீலர்கள்.

02. இந்துமத பிரசாரம் மேற்கொண்டு வரும் செருக்குற்ற வித்துவச் செம்மல்கள்.

03. தவித்த முயலடிக்க கங்கணங் கட்டிக் கொண்டு நிற்கும் பிறமத நாகரீகமற்றோர்.

04. இந்துமதம் பற்றி எழுதப்பட்டுள்ள எண்ணிக்கையான நூல்களும் அவற்றின் சிக்கலான தன்மையும்.

05. சாதிக்கொடுமையும் சமூக ஏற்றத்தாழ்வு அமைப்பும்.

## ஆசாரசீலம்

ஆசாரம் என்பது தூய்மை. சீலம் என்பது ஒழுக்கம். தம்மை ஓர் இந்து என்று கூறிக்கொள்ளும் இந்துமத சீலர் முதலில் தான் சார்ந்த சமுதாயத்திற்கு உண்மை உள்ளவராகவும் ஒரு உதாரண புருடராகவும் வாழும்நெறி முறைமைகளில் முற்றாகவே தவறி விடுகிறார். மூன்று விரல் திருநீற்றுப் பூச்சும் உருத்திராட்சை மாலையும் வாயில் சிவ நாமமும் மட்டும் ஒருவரை ஆசாரசீலராக்கி விடமாட்டா.முதலில் "வாழு; வாழவிடு" என்ற பரந்த கொள்கை அவரது இதயத்தில் பயிற்சி செய்யப்பட வேண்டும். உண்மை, நீதி என்பவற்றிற்கு எப்போதும் உயர்ந்த நிலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இடாம்பீகம், படாடோபம் என்ற கர்வநடத்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏழையின் நிலைக்காக இரங்கி இதயத்தில் ஊற்றெடுக்கும் இரண்டு சொட்டுக் கண்ணீராவுதல் உகிக்கும் மனப்பக்குவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். மொத்தத்தில் வெட்ட வெளிச்ச வாழ்க்கை வாழுமோர் உதாரண புருடராக மிளிர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சமூக அமைப்பில் ஒரு சாதாரண இளைஞனோ யுவதியோ மேற்கூறிய பக்திக் கோலத்தில் நிற்கும் ஒருவரைக் காண நேரிடும் போது முதலில் அவர் மனதில் கற்பனை செய்வது என்ன தெரியுமா? இவர் ஒரு பக்காத் திருடராக இருக்க வேண்டும்.என்ற ஐயுறவுதான். முதல் அபிப்பிராயமே அப்படி அமைந்திருக்க அவரது ஓரிரு செய்கைகள் அதனை மெய்ப்பிக்கத் தகுந்தாற் போல அடுத்து இடம்பெற "இப்படியான வேடங்களைத் தாங்கும் அனைவருமே வேடதாரிகள்தான்" என்ற கருத்து அவ்விளம் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இதுவே இன்றைய இளம் சந்ததியினரை சமயப் பாதையினின்றும் வெகுதூரத்திற்கு அப்பால் விரட்டி அடிக்கச் செய்த முதற்சம்பவம்.

இந்துமதம் என்ன கூறுகிறது? ஏற்க முடிந்த பணியை மட்டும் எடுத்துக்கொள். ஏற்றுக் கொண்டு விட்ட பின்பு மனசாட்சிக்கு மாறுபாடின்றிஅதனை நிறைவேற்று என்பதுதானே?

"மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்தது ஒழித்து விடின்."

இறைதொண்டு புரியவென்ற உயர்நோக்கோடு ஆலய தர்மகர்த்தா சபையில் அங்கம் வகிப்போரும் திருப்பணி வேலையில் பங்குபற்றி ஊழியம் செய்வோரும் தம்மை ஒரு சேவகனாக அல்லது அடியானாக எண்ணாது ஏனையவர்களை விடத் தாம்உயர்ந்தவர்கள் என்ற எண்ணக்கருவோடு செயல்படுவதையும் உதாசீன மனப்பாங்கினை கடைப்பிடித்து வாழ்வதையும் நாம் பார்க்கிறோம். ஆலயம் என்பது அகங்காரம் ஒடுங்கும் இடம் என்பார்கள். ஆனால் இங்கோ அகங்காரம் சிறப்புற்று விளங்கும் ஒரு களமாக மாறி வருவது வேடிக்கையானதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதப்பிரசாரர்கள்

இந்துமத சொற்பொழிவுகளை கேட்கும் போது கூட இளநெஞ்சங்களுக்கு இன்று ஏமாற்றமே எஞ்சி நிற்கிறது. தமது நெஞ்சங்களில் உறைந்து கிடக்கும் தம்மால் இனங்கண்டு எடுத்துக் கூற இயலாத சிக்கல் நிறைந்த குழப்பங்களுக்கு இதுவரை சமய மேடைகளில் விளக்கம் தரப்படவில்லை! சந்தேகங்கள் நீக்கப் படவுமில்லை.எந்த ஒரு வித்துமாமிசரும் தான்கற்ற வேத , ஆகம, பிரபந்த, திருமுறைத்தொகுப்புக்களை ஆங்காங்கே அள்ளி இறைத்து தமது மேடைப்பேச்சு கவர்ச்சியாக இருக்கத்தக்கதாக மணிக்கணக்கில் விளாசி விட்டு இறங்கிச் செல்கிறாரேயன்றி அதனால் விளைந்த பயனைப்பற்றிச் சிறிதும் சிந்திப்பதாக இல்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் தான் மேற்கோள் காட்டிப் பேசிய பாடல்கள், கீர்த்தனைகள் என்பவற்றிற்கு அவராலேயே பயன் தெளிந்து வாழ்ந்து காட்ட இயலாதிருப்பதுதான்.

உதாரணமாக, சில ஆலயங்களில் கந்தபுராணம், காசிகாண்டம், பிள்ளையார் கதை பொன்ற தோத்திரப்பாடல்கள் படிப்பார்கள். ஒருவர் பாடல் வரிகளை பொருள் பிரித்துப் பாட இன்னுமொருவர் அதற்கான பயன் என்று சொல்லப்படும் பொருள் விளக்கம் கொடுப்பார். அந்தப் பொருள் விளக்கம் கூட விளங்காத வகையில் அமைந்த பாடல் வரிகள் போன்றே கடுமையானதாக இருக்கும். இந்த நிலையில் பாடுபவருக்கோ, பயன் சொல்பவருக்கோ, கேட்டுக் கொண்டிருக்கும் சாதாரண பாமரருக்கோ எதுவும் புரியாத தொரு தொடர்பற்ற நிலையே அங்கு நிலை பெற்றிருக்கும். புராணம் பாடுவதும் பயன் சொல்வதும் வேண்டியதுதான். ஆயினும் அதன் விளைவு கருதி முறைமையை மாற்றியமைத்து எல்லோரும் விருப்புடன் கேட்டு மகிழத்தக்கதோர் உபாயத்தை கண்டு கொள்ளுவதுதானே சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளைஞர்களோ நவீன கால நீரோட்டத்தில் கலந்து நீந்துபவர்கள். அந்த நீரோட்டமோ விஞ்ஞான யுகம். ஏன்? எப்படி? எவ்வாறு? எதற்காக? என்ற வினாக்களுக்கு விடை தெளிவாக இல்லாதவிடத்து ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தில் அவர்கள் இல்லை. இது காலத்தின் நியதி. ஆகவே அதனை மாற்றியமைக்க முடியாது. நமது தொடர்பாடல் முறையில்தான் மாற்றம் வேண்டும். இம்மாற்றம் மதிநுட்பம் கலந்ததாக இருத்தல் வேண்டும்.

மேடையில் கேட்ட சமயச் சொற்பொழிவானது தாம் இதுவரை அறிந்திராததொரு புது "போமியுலா"வை அறிந்த நிலையையே அவர்களுக்கு உணர்த்தியதே தவிர அதனை ஆதாரத்துடன் நிறுவி ஏற்றுக்கொள்ளச் செய்யும் கிரகிப்புத்தன்மையை ஏற்படுத்தவில்லை. மொத்தத்தில் இன்று இடம்பெறும் இந்து சமயச் சொற்பொழிவுகளுக்கும் இளைஞர்களது எதிர்பார்ப்புகளுக்குமிடையே ஒரு 'பிரபஞ்சம்" நீண்டு கிடக்கிறது என்று கொள்ளப்பட வேண்டும். இதுவும் சமயத்தின் பால் உள்ள பற்றை சிதைத்து விடும் தடயங்களில் ஒன்று.

## மதமாற்றம்

பெற்றதாயை அறிந்த தனயன் எந்த நிலையிலும் அவளுக்கு வேட்டு வைக்க நினைக்கவேமாட்டான். காரணம், தாய்மையின் ஒப்புயர்வினை தெளிவறிவற்ற நிலையிலேனும் இதயத்தால் உணர்ந்து கொண்டிருப்பதுதான். அதே போன்றே தன் சொந்த மதத்தை அறிந்த எவரும் வறுமை, பிணி, வாழ்வு, வசதி என்ற சிறுகாரணங்களுக்காக அதை விட்டு விடவோ உதறி தள்ளி விட்டு ஓடவோ நினைக்கமாட்டான். இன்று பலர் உலகின் நாலா பகுதிகளிலும் இந்து என்ற பெயரில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் உண்மையிலே அவர்கள் எந்த மதபோதனைகளையும் விசுவாசித்து கிரகித்து வாழாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வெறிபிடித்த பிற மதவாதிகள் பேதைகளையும் பெண்டீரையும் ஆசை காட்டி பரிசில்கள் கொடுத்து அதனூடாக வசியப்படுத்தி தமது நச்சுக்கருத்துக்களை அவர்களின் அடிமனதில் விதைத்துவிடுகிறார்கள். நன்றி உணர்வும் மீற முடியாததொரு அடிமைத்தனத்திலும் சிலந்தி வலையில் அகப்பட்டுப்போன சிற்றெறும்பாக ஈற்றில் அவர்கள் விரும்பாமலேயே மதமாற்றம் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு மதமாற்றம் பெறுவோர் தம் குற்றங்களை மூடி மறைக்கவும் மனசாட்சியின் வைதலுக் கஞ்சியும் ஏனையவர்கள் தம்மை அடையாளம் கண்டு கொள்ளாதிருக்கவும் பிறப்பால் வந்த அசல் மதவாதிகள்போலவே அதிக விழிப்புணர்வு பெற்று தாம் முன்னர் எந்த மதத்தை சார்ந்திருந்தாரோ அந்த மதத்தையே அவதூறாக விமர்சிக்கவும் தொடங்கி விடுகிறார்.இது மதச்சுதந்திரத்துக்கு மட்டுமல்ல, மதம் என்ற மாண்பிற்கே பேரிழப்பாகுமொரு அவலட்சணமாகும்.

இந்த நிலையில் நடுநிலை நின்று ஆராய்ந்து பார்த்தால் உண்மையிலே ஏமாந்தது யார்? இந்து மதமா? தழுவல்மதமா? புதிய மதத்தை தழுவியவரா? சந்திரனைப்பார்த்து நாய் குரைத்த கதை விழைய காரணமாக எவர் இருந்தார்களோ அவர்கள்!

## நூல்களின் சிக்கல் தன்மை

இந்துமதம் ஆறு ஏழு ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த பழைமையும் செழுமையும் சேர்ந்த மதம் என்பது ஆய்வாளர்களது கணிப்பு. அது மட்டுமல்ல காலத்திற்கு காலம் அவதார புருடர்களும் ஞானிகளும் தோன்றி இந்து மதத்திற்குப் புதிய புதிய அலங்காரங்களை தமது வாழ்க்கை நடைமுறைகளாலும் வேத உபதேச பண்ணிசைகளாலும் செய்து போந்தனர். அத்தோடு ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட மதங்களை உள்ளடக்கிய இவ்விந்துமதத்தில் வழிபட ஏற்ற இறை முகூர்த்தங்களாலும் அவை பற்றிய புராணக்கதைகளாலும் அத்தோடு, ஒரே சம்பவத்தை இரண்டு அல்லது மூன்று விதமாக கற்பனையில் புனைந்து இலக்கிய விமர்சனமூட்டிக் கூறப்படுவதனாலும் சாதாரண வாசகர் மனதில் உண்மை எது? பொய் எது? என்று உய்த்தறிந்து நிதானிக்கமுடியாததொரு குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ளது.

ஒரு சிறந்த புத்தகம் வெளியிடப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். விற்பனை நிறையக் கிடைக்கிறது. வாசகர்கள் மேலும் பல பிரதிகளைக் கேட்கின்றனர். இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு என்று இப்படிப் பல பதிப்புக்கள் காலத்துக்கு காலம் இடம்பெற்று புத்தகத்தின் பெறுமதி எங்கும் புகழப்படுகிறது. ஆயினும் ஆரம்ப பதிப்பிற்கும் அடுத்தடுத்த பதிப்புகளுக்கும் இடையே சிறு சிறு வேறுபாடுகள்- திருத்தங்கள். ஆனாலும் அடிப்படைக் கருப்பொருளில் மாற்றமில்லை. இது போலவே ஆறு ஏழு ஆயிரம் வருடங்கள் பழைமையான இந்துமதக் கோட்பாடுகளும் சித்தாந்த வியாக்கியானங்களும் காலத்துக்கு காலம் தோன்றிய ஞானிகள்,சமயக்குரவர்கள், ஆழ்வார்கள், தீக்ஷதர்கள் என்போரால் மறுபதிப்பு செய்யப்பட்டதேயன்றி புத்தாக்கம் எதுவும் செய்யப்படவில்லை. ஆதலால் சித்தாந்த அடிப்படை மாறாத புராணக்கதைகளில் மட்டும் கதையம்சங்களில் சிறிது மாற்றங்களும் வேறுபாடுகளும் ஏற்பட்டன. இது கால நீட்டத்தின் பயனாக பெற்றுக் கொள்ளப்படும் ஒரு வழிமுறைதான். ஆகவே இதனை பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஆயினும் தற்காலத்தில் எம்மத்தியில் தோன்றி அலைக்கழித்து வரும் சோதிட பஞ்சாங்கங்கள் காட்டும் வழிமுறைகள் விமர்சிக்கப்படத்தக்கதொன்றே.

பஞ்சாங்கக் கணிப்புகள் காலம், நேரம், கிரக நிலை என்பவற்றை வைத்து கணிப்பீடு செய்யப்பட்டே திதி, நட்சேத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன கூறப்படுவதனால் இதில் இரண்டுபட்டு மொழிவதற்குக் காரணம் இல்லை. சோதிடம் முழுக்க முழுக்க துல்லியமான கணிப்பீட்டு முறைமையை ஒட்டியே பேசப்படுவதனால் குறித்த மொழிவுகள் துல்லியமானவையாகவே அமைந்து விடும்.மொழிவில் ஏதும் பிழைகள் இடம்பெறுமாயின் அது சோதிடரின் கணீப்பீட்டில் ஏற்பட்ட பிழையேயன்றி வேறல்ல. இரண்டும் இரண்டும் சேர்ந்தால் அதன் தொகை நாலு என்பதை எந்த முறையால் வேண்டுமானாலும் கணக்குப் பார்க்க முடியும். ஆயினும் அதன் தொகை நாலு என்பதில் மாற்றம் நிகழாது. இதே போன்றே திதி, நட்சேத்திரம், யோகம், கரணம் என்பவை அந்தந்த நேரங்களில் சேருமேயன்றி இம்மியும் மாற்றமடையாது.

இன்று எம்மத்தியில் வாக்கியம், திருக்கணிதம் என்று இரு சோதிட பரிபாலன சபைகள் மூலம் இரண்டு பஞ்சாங்கங்கள் ஆண்டு தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியான தகவல்களைத் தந்து கொண்டிருப்பதன்ால் இதுவும் இந்து மத சீரியநெறிகளுக்கு விடப்படும் ஒரு சவாலாகவே எடுத்துக்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## சாதிப்பிரிவினை

சாதிக்கொடுமைக்கும் இந்து சமயத்திற்கும் தொடர்பே இல்லை. “இதுதான் இந்து மதம்” என்று பிறரை வஞ்சிக்கவும் அவர்கள் வசதியாக வாழ்க்கை அமைத்துக் கொள்ளவும் பிற்காலத்தில் பிரபுத்துவ நிலையில் இருந்தவர்களால் புகுத்தப்பட்ட செருகல்தான் இந்த சாதிக்கொடுமை. இது ”இந்து மதத்தின் நாற்றம்” என்பதை விட “சமூதாயத்தின் பிணி” என்று சொல்வதே பொருத்தமாக அமையலாம்.

சாதிப்பகுப்பு இந்து மதத்தின் எந்த பிராமண நூலிலும் ஒரு தண்டனையாகவோ அல்லது தாழ்வாகவோ வரையறுக்கப்படவும் இல்லை, வலியுறுத்தப்படவும் இல்லை. பிராமணர் சத்தீரியர், வைசீயர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்கள் என்னும் சாதிப்பிரிவினையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வகுத்திருந்தாலும் அதன் நோக்கம், செயற்பாடுகள் எந்தவொரு திறத்தாரையும் தாழ்வாகவோ, உயர்வாகவோ மதிப்பீடுவதற்காகவன்று. முக்கியமாக அவை கோயில்கள் போன்ற அறச்சாலைகளில் ஒரு ஒழுங்கு விதியின் கீழ் பலதரப்பட்ட பணிகளும் சமகாலத்தில் நிகழவேண்டும் என்ற மேலான சமூகச்சிந்தனையில் தான் வகுக்கப்பட்டது. என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் பிராமணர்களின் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தால் பிரகாரத்தை சுத்தம் செய்வதற்கும் ஒழுங்கு முறைகளை நிர்வகிப்பதற்கும் ஏனைய பணிகளைச் செய்வதற்கும் ஆள் இல்லாமல் போய்விடுமல்லவா? அதனால்தான் ஒவ்வொரு திறத்தாரினது இயல்பிற்கும் ஆற்றலுக்கும் உட்பட்டவகையில் பல்வேறு பணிகளை ஒரு ஒழுங்கு விதியின் கீழ் கைக்கொண்டு வர ஏற்ற முறையாக இந்த நான்கு வருணங்களும் ஆக்கப்பட்டுள்ளன.

இதனை நன்றாக்கிப் பாராமல் சாதிக் கொடுமை என்ற காரணத்திற்காக வேறுமதங்களுக்கு மாறிச் செல்ல முனைவது சந்திரனுக்குப் பயந்து பரதேசம் போன கதையாகி விட்டது. அது மட்டுமன்றி இந்துமதக்கோட்பாட்டின்படி ஆலயத்திற்கு சென்று மட்டும்தான் இறைவனை வணங்கி அருள் பெற வேண்டுமென்றில்லை. காயமே கோயிலாக, கடிமனம் லிங்கமாக நாம் இருக்கும் இடத்திலேயே நமக்குள்ளேயே இறைவனைக் கண்டு இன்புற்றிருக்க முடியும். இந்த முறையும் இந்துமதம் உணர்த்தும் ஒரு வழிபாட்டு மார்க்கமேதான்.

இந்துமதம் ஒரு சாதுவான மதம். மக்களையும் அது அவ்வாறு சாதுவாக அடங்கி ஒடுங்கி இருக்கும்படிதான் வற்புறுத்துகிறது. அன்பு, அறம், நீதி, உண்மை, ஈகை என்ற இந்த அருங்குணங்களே அதன் அம்சங்கள்

புலன்களை அடக்கி "நான்" என்ற அகந்தை ஒடுங்கி வாழும்படியேதான் அது உபதேசிக்கின்றது. அப்படி இருக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆலயத்தினுள் பிரவேசிக்க வேண்டாம் என்ற வன்முறையைப் பிரயோகித்து உயர்சாதி என்று கூறிக்கொள்வோர் கட்டளை பிறப்பிப்பதும் பாவம்; இந்து மத கோட்பாடுகளுக்கு முரண்.

2. "ஆலயத்திற்குள் எப்படியும் பிரவேசித்தே ஆக வேண்டும்." என்று தாழ்ந்த சாதி எனக் கருதப்படுவோர் அடம் பிடிப்பதும் பாவம்; இந்துமதக் கோட்பாடுகளுக்கு முரண்.

இந்த இருவகை நடத்தையிலும் அன்பு, இரக்கம், பணிவு என்ற தெய்வீகத் தன்மைகள் அறவே இடம்பெறவில்லை. ஆகையினால் அன்பே வடிவமான இறைவனை வழிபடவேண்டி வன்பு வழிமுறைகளை நாடி விரைதல் எஞ்ஞான்றும் ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களாகும்.

சாதிக்கொடுமை யுகம் யுகமாக தொடர்ந்து வருவதனால் அதை முற்றாக நீக்குவதென்பது முயற்கொம்பு. அத்தோடு அது பிழையானதொரு அணுகுமுறை வேறு. தாழ் சாதி நந்தனார், திருவள்ளுவர், திண்ணனார் என்போர் தமது ஆன்மீக பண்பாட்டு நெறிமுறைகளால் பரமனைப்பணிந்து முக்தி இன்பம் பெற்றுக்கொள்ளவில்லையா? அத்தோடு இவர்களை உயர்சாதியினர் இப்போது சித்தர்களாகப்போற்றிப் பணியவில்லையா? இம் மகான்கள் காட்டிய சீரிய நெறி முறைகள் இருக்கத்தக்கதாக திமிர் பிடித்து ஆலயத்திற்குள் புகுவதென்பதும் சரியான வழியல்ல. அப்படியொரு நிலை அவசியமும் இல்லை. ஏன்; இன்றைய வாழ்க்கை நடைமுறையில் கூட எத்தனையோ கீழ் சாதியினர் தம் முயற்சியினால் முன்னேறி அரச உயர் பதவி வகித்துவருகின்றனர். கீழ்சாதி என்று அவர்களை தரைக்குறைவாக இகழ்ந்தவர்கள் கூட தமது இறுமாப்பைக் கைவிட்டு அவர்கள் முன்சென்று தங்கள் காரியங்களை சாதித்து வரவில்லையா? நம்மை நாம் உணர்ந்து செயற்படும் போது உலகத்தில் கத்தியின்றி இரத்தமின்றி போராடலாம். இதுவே இந்துமதத்தின் சீரிய வழிகாட்டலும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 03

## ஆற்றவேண்டிய முக்கிய பணிகள்

இந்துமதம் பற்றி நாள் தோறும் பொருள் செறிந்த கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் கூட இடம்பெற்று வருகின்றன ஆயினும் அவை காலத்திற்கு ஏற்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு தொகுத்து வெளியீடப்படுபவையாக இல்லை!

அருட்கடல் திருமுருககிருபானந்த வாரியார், கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசன், வாகீச கலாநிதி வித்துவான் கி.வா.ஜகந்நாதன் போன்ற ஓரிரு அறிஞர்களின் முயற்சிகளைத் தவிர வேறெந்த விற்பனராலும் இந்துசமய சாதகனின்(பயிற்சியாளன்)இன்றையத் தேவைகள் எவை என்பதை இனங்கண்டு தெளிந்து அவற்றிற்கு இசைவாக ஆக்கங்களை வெளியிடும் சமயோசித யுக்தி கையாளப்படவில்லை! சோலை மந்திரம் போன்று தாம் கற்றுணர்ந்த வித்தைகள் அனைத்தையும் மற்றும் படித்துச் சுவைத்த பாராயணப் பாடல்களையும் அப்படியே ஒப்புவிப்பதனால் யாருக்கு என்ன நன்மை விளைந்து விடப் போகிறது? இந்த அணுகு முறையினால் இந்து சமூகம் இதுவரை அடைந்த அபிவிருத்தி அல்லது வளர்ச்சிதான் என்ன? இதைச்சற்று ஆராய்ந்து பார்ப்போமா?

இந்து மதத்திற்கு அது காலம் காலமாக அழியாது நிலைத்து நிற்கத்தக்க எண்ணரிய மெய்ஞ்ஞான, ஜீவ அறிவு முத்துக்களை ஞானிகளும்,குரவர்களும் அளித்துப் போந்துள்ளனர். இவை மிகப் பரிபூரணமானவை. ஆகவே அதற்கு இன்னும் புதிதான சித்தாத்தங்களோ கோட்பாடுகளோ ஏன் பிரசுரங்களோ கூடத் தேவையில்லை. ஏற்கனவேஉள்ள அதன் தெள்ளிய கருத்துக்களையும் தத்துவங்களையும் சாதாரண பாமரமகன் ஆர்வத்துடன் விளங்கி உள்ளன்போடு ஏற்று ஒழுகிட ஏற்ற உபாயங்களே அதன் இன்றையத்தேவைகளாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதத்தின் ஒப்பற்ற கோட்பாடுகளும் அதன் சித்தாந்த போதனைகளும் அகன்ற ஞான உண்மைகளும் இலகு வடிவில் பொருத்தமான கிரகித்தல் முறைமூலம் அதனை பின்பற்றும் சாதகனை வடிவம் மாறாத நிலையில் சென்றடையத்தக்கதாக ஊக்குவிக்கப்படவேண்டும். இதுவே இந்து சமூகம் எதிர்பார்த்து நிற்கும் அதன் இன்றையத் தேவைகள் இவையின்றியே அது எதிர்கொள்ளும் இன்றைய அவலங்களும் கூட.

## அன்றும் இன்றும் என்றும்போல் உள்ள பணி

இந்து சமய அறிஞர்களைப் பொறுத்தவரையில் அன்றும் இன்றும் என்றும் ஒரே பான்மையைக் கடைப்பிடித்து வித்தக வேதாந்த இலக்கியங்கள் பேசி அதனால் சுய திருப்தி அடைந்து வருகிறார்களேயன்றி வேறொரு பயனும் ஏற்படவில்லை. இது இன்றைய காலத்தேவைக்கான இடையூறு என்பதை தயவு செய்து அறிஞர் பெருமக்கள் நன்குணர்ந்து இந்துமத சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள நலிவுகள், குறைபாடுகள் எத்தகையவை என்பதை மதிநுட்பமாக அறிந்து அதற்குப் பரிகாரமாக புதிய வடிவில் அவர்களது வித்துவ அறிவைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லிக் குடத்தில் தண்ணீர் மொண்டு யாது பயன் காண்பீர் அறிஞர்களே!

ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் கூட இல்லாத அளவு இன்று இந்துமத அனுஸ்டானர்கள் வேகமாக மதமாற்றம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அப்பட்டமானதொரு உண்மை விவகாரம். இது ஏன்? யார் சிந்தித்தார்கள்? சிந்தித்திருந்தால் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் எவை? இல்லையென்றால் ஏன்?

இந்த மதமாற்றங்களுக்கு வெளிச்சக்திகள் மட்டும் காரணமல்ல. உட்சக்திகளும் நியாயமான அளவு பொறுப்பேற்கவே வேண்டும். உட்சுவர் செம்மையாக பூசப்பட்டால் வெளிச்சுவரைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிகார நடவடிக்கைகள்**

முதலில் பேருக்கும் புகழுக்கும் மதத்தொண்டு புரிவதை நாம் விட்டொழிய வேண்டும். எம்முன்னால் ஊனமுற்றுக்கிடக்கும் சமூகத்தின் உயர்வே "எமது வேதம்" எனக்கொள்ளுதல் வேண்டும். ஞாலமெல்லாம் பரவும் வகை செய்தல் அல்ல. நம் அயல் வீட்டவரின் அறியாமை இருளைப்போக்குவதே எமக்குள்ள தலையாய பணி என்று துணிதல் வேண்டும். புனித கடமையில் புகுந்து விட்ட எமக்கு பூதலமே எதிர்கொண்டாலும் இனிப்பயமே இல்லை என்ற பிரதிக்ஞை வேண்டும். தியாகம் என்ற மனப்பக்குவத்தோடு முடிந்தவரை சேவை செய்தல் வேண்டும். இவையே இந்து சமூகம் இன்று நமக்கு முன் நாடி நிற்கும் அதன் இன்றைய தேவைகள். சமூக சீர்திருத்தம் அல்லது சேவை காலத்தின் தேவையைப் பொறுத்து அமையப் பெற வேண்டுமே ஒழிய கூறியவற்றைக் கூறிக்கொண்டே இருப்பதல்ல. பொன் விளக்கே ஆயினும் அது தூண்டு கோலின்றி பிரகாசமாக ஒளி தரமாட்டாது. ஒப்பற்ற சனாதன தர்மமேயாயினும் இந்து மதம் அதன்மீது படிந்துள்ள புழுதிகள் ஒட்டடைகள் களையப்பட்டு புதுமெருகூட்டப்படவே வேண்டும்.

## அ) பிரசாரர்கள் தேவையில்லை

இந்துமதக்கோட்பாடுகளையும் அதன் நீதிநெறிகளையும் விரிவாகப்புகட்டும் நூல்கள் இதுவரை வெளிவந்தன போதுமானவை. இப்போது அதற்கு தேவைப்படுவதெல்லாம் பிரசாரங்களல்ல. சாதனையும் சாதனையாளர்களுமே. ஆகவே,

1) மதமென்று கூறிக்கொண்டு அதன் மூலம் புகழ் சம்பாதிக்க நினைக்கும் கூட்டம் முதலில் அதன் இழிதொழிலை முற்றாக நிறுத்தவேண்டும். முடிந்தால் உதவவும் முடியாத பட்சத்தில் பேசாமல் உட்கார்ந்திருக்கவும் பழகிக்கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இப்படி இப்படித்தான் இறைவனை வணங்க வேண்டும் என்ற ஆசாரக்கட்டுப்பாடுகளை முடிந்தளவு தளர்த்த வேண்டும். பக்தி இப்படித்தான் அமைய வேண்டுமென்ற கோட்பாடு எதுவுமில்லை. அது எப்படி வேண்டுமானாலும் அமையலாம். வெளிப்படும் பக்தி அடுத்தவருக்கு எதுவித இடைஞ்சலும் ஏற்படுத்தாத போது அதனை எப்படி வேண்டுமானாலும் பேணலாம். அன்பின் அடிப்படையே பக்தி. அப்படி இருக்க கிரிக்கட் விளையாட்டைப்போல் அதன் சுவடுகள் இப்படி இப்படித்தான் அமைய வேண்டுமெனக் கூறுவது சுத்த பேதமை. இது வரை தோன்றிய ஞானிகளும் சமயக்குரவர்களும் ஏன் சித்தர்கள் கூட ஒருவர் பின்பற்றிய முறைமையை மற்றையவர் அனுசரித்துப் போகாமல் அவரவர்கட்குரித்தான சுயபாணியில் ஆனால் அடிப்படை மாறாத பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்தே முத்தி நிலை எய்தினர்.

கண்ணப்பநாயனார் என்ற திண்ணனார் வரலாறு, நந்தனார் என்ற ஏழை அடியாரின் வாழ்வியல் மற்றும் அப்பூதி அடிகளின் பக்தி மார்க்கம் என்பன இதற்கு அமைந்த நற்சான்றுகளாகும்..

## ஆ) ஆலயங்களை வியாபார தலமாக மாற்ற நினைக்காதீர்கள்

நம்மைப் பற்றிப் பிணித்துள்ள அகங்காரம் அல்லது மமதை ஒடுங்குமிடமே ஆலயம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. முன்பெல்லாம் எமது சைவ ஆலயங்கள் அமைதியையும் தூய்மையையும் பேணும் ஒரு புனித இடமாகவே இருந்து வந்தன. ஆனால் அவை இன்று களியாட்ட இடங்களாகவும் வியாபாரத்தலமாகவும் செயல்பட்டு வருவதைக்கண்டும் வாளாவிருந்துவிடமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் நிருவாகம் வருமானம் தேடும் செயற்பாட்டிற்காக இப்படி ஒரு வியாபார நெறியை சில ஆலயங்களில் தோற்றுவித்து நடைமுறைப்படுத்தி வருவதைப்பார்க்கும் போது அப்பணியானது கண்களை விற்று சித்திரம் வாங்கிய பான்மைக்கு நிகராக கருதமுடிகிறது.

கண்கள் இல்லாத போது கவர்ச்சியான சித்திரத்தால் யாது பயன் விளைந்து விடக்கூடும்? தூய எண்ணங்களையும் தெளிந்த பக்தியையும் வெளிக்கொணரத் தவறிய ஆலயங்களினால் ஆகும் நற்பயன்கள் தான் என்ன? பிறசமயங்களின் வெளிப்பகட்டுகளும் சில சமூக நாகரீக நடவடிக்கைகளும் நம்மவர்களையும் தொற்றிக் கொண்டு விட அவற்றை வெளிப்படுத்தி நடிக்க ஏற்றதொரு மேடையாக இன்று சைவ ஆலயங்கள் பல உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

எது இல்லாவிட்டாலும் பரவாயில்லை சைவ ஆலயங்களில் அமைதியான பக்திச் சூழலும் தூய்மையைப் பேணிவரும் இட வசதியும் அமையப்பெற்றிருந்தால் அதுவே போதுமானது. மெய்யன்புடன் வழிபடும் அடியார்களின் மனதில் பக்திச் சுவையைப் பெருக்கும் ஒரு புனித இடமாக கோயில்கள் விளங்கட்டும். பிற எல்லாவற்றையும் சேர்த்துப் புகுத்தியும் பக்திச்சுவை மட்டும் பிறக்க வழியின்றேல் அவற்றால் எப் பயன் விளையக்கூடும் அன்பர்களே?

இந்துமதத்தின் புனித சின்னங்களாக விளங்குவன ஆலயங்களே. இப் புனித சின்னங்கள் இந்துமதத்தின் இயல்பினையும் அதன் முற்று முடிந்த நோக்கத்தையும் தாராளத் தன்மையினையும் வெளிப்படுத்தி நிற்கும் கருவிகளாக மிளிர வேண்டும். அவை பணம் சம்பாதிக்கும் சந்தையாகவோ அல்லது ஜமிந்தார் வீட்டு மாளிகையாகவோ இருக்க வேண்டாம். நித்தமும் அன்பும் பக்தியும் பெருக்கும் ஒரு சாந்தினிகேதனாக விளங்கினால் போதும். ஆகையினால் தேவையற்ற தடைகள் யாவும் தளர்த்தப்படவே வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 04
## அ. மெய்யியல் விளக்கங்கள்

இந்த அத்தியாயத்தில் இந்து சமயக் கருத்துக்கள் மற்றும் அதன் மூலதத்துவங்கள் அத்தோடு கருமானுஸ்டான செயல்முறைகள் குறித்து எழும் இயல்பான சந்தேக வினாக்களுக்கு விடை பகரும் பான்மையில் தர்க்க ரீதியாக ஆராய்வோம்.

**அ) இந்துமத அனுஸ்டான படிமுறைகள்**

இன்னோரென்ன பிற விடயங்களில் அனுபவ முதிர்ச்சியைப் பெற்றுக் கொண்ட மனிதன் தன் வல்லமைக்கும் மீறிய சகல சக்தியும் கொண்ட ஒரு அம்சம் இருப்பதை ஒப்புக்கொண்டானே ஆயினும் அதன் வியாபகத்தினை கண்டு உணரும் வழிமுறைகளை அறிந்தானில்லை. அவனது புலன்கள். மனம், சித்தம், கருத்து என்ற கருவிகளையும் கடந்து வியாபித்து நிற்கும் இறைவனை ஞானக்கண்களாலேயன்றி ஊனக்கண்களால் அடையாளம் காணமுடியாது என்று இந்துசமய சித்தாந்தங்கள் எடுத்தியம்பிற்று.

"இறைவனை தரிசித்தே ஆக வேண்டும் அது எவ்வாறு சாத்தியமாகலாம்?"

"ஞானக்கண்கள் பெற்றிருக்க வேண்டுமே"

"அதனைப்பெறுவதெப்படி"

"முதலில் நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருக வேண்டும். பல கொடூர சிந்தனைகளையும் பாவங்களையும் பிறப்பிக்கின்ற இடமாக நெஞ்சம் என்னும் திணியான மனோசிலை நெகிழ்ந்து அதில் அன்பு, இரக்கம், ஈகை என்ற அருங்குணங்கள் முகிழ்க்க வேண்டும்"

"அப்படியா? அதற்கு என்ன வழி?"

"பஞ்சாட்சரம் என்ற திரு மந்திரத்தை இடையறாது ஓதிக்கொண்டு சரியைத்தொண்டு செய்து வாருங்கள்"

"அவ்வளவுதானா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை. இது முதல் படி. அதன் பின்னர் நீங்களாகவே கிரியைத்தொண்டில் ஈடுபட்டு மகிழ்வீர்கள்"
"அதுமட்டும்தானா? இன்னும் ஏதாவது...?"
"அப்போது செபம், தியானம் என்ற யோகநிலை வந்தெய்யும். அதன் பின்பு மனதில் பிறக்கும் ஆசை, அவா என்ற அழுக்காறுகள் படிப்படியாக நீங்கிவிட பற்றற்ற தன்மை ஒன்று உருவாவதை உணர்வீர்கள். அதுமட்டுமல்ல எங்கும் எதிலும் இறைவனின் சொரூபத்தை பார்ப்பீர்கள். அப்போது உங்களை அறியாமலே ஞானக்கண் உதயமாகி விடும்."
"இதற்குத்தானா இத்தனை முயற்சிகள்?"
"சொல்லுதல் யார்க்கும் எளிது ஆயினும் சொல்லியாங்கு காரியம் ஆற்றுவதில்தானே சிரமம் இருக்கிறது."
"அப்படி என்ன சிரமம்?"

"மனிதமனம் இருக்கிறதே அதை இலகுவில் அடக்கி எமது ஆணைக்குக் கீழ்கொண்டு வருவது என்பது இலேசு பட்ட காரியம் அல்ல. அது குரங்குபோல் ஒன்றைவிட்டு இன்னொன்றுக்கு பாய்ந்து சென்று அலைக்கழித்து விடும். மனதை ஒருவழிப்படுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான பயிற்சியே இந்த செப தியானங்கள் ஆகும்."

இந்துமதத்தின் வழிபாட்டு முறைகள் நான்கு. அவை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதாம். எந்த ஒரு சமய ஞானமும் அற்ற ஆரம்பநிலைச் சாதகர் இறையன்பு பூண்டு ஒழுக நாட வேண்டிய பக்தி மார்க்கம் சரியைத் தொண்டாகும். சிறிது அன்பு வாய்க்கப்பெற்றவர் அவரதுஉள்ளம் விரும்பி ஆற்ற வேண்டிய அடுத்த படிமுறையான பக்திமார்க்கம் கிரியையாகும். இந்த இரண்டு வகை தொண்டுகளினாலும் இறை உணர்வினை சதாகாலமும் பெற்றுவிட்ட அடியார் நாட வேண்டிய அடுத்த படிமுறை யோகம் ஆகும். எல்லாவற்றிற்கும் இறுதியானதும் முற்று முழுதானதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறையே ஞானமாகும். ஞானவெள்ளத்தில் ஆத்மா பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து வீடுபேறு என்னும் ஆனந்தப் பெருவாழ்வு எய்தி விடுமாம். இந்த ஞான நிலையில் இறைவன் பார்க்குமிடமெல்லாம் பரமானந்தமாக நீக்கமற எங்கும் நிறைந்திருப்பானாம். மேற்கூறிய இப்பயிற்சி நெறிகள் ஒரு குருவின் அனுசரணையின்றி வந்தமைவது கடினமென்றே சொல்லப்படுகிறது. குருவின்றி முக்தி நிலை அடைந்த ஒரே மகான் ஸ்ரீ ரமண மகா ரிஷி என்று சொல்லப்படுகிறது. சாதாரண இந்துக்கள் தீட்சை பெற்றுக்கொள்ளுவதும் இதனால்தான்.

இவை தவிர வேதத்தின் உட்பொருளை சாதாரண மக்களும் அவரவர்களுக்குரித்தான ஆற்றலுக்கேற்றவாறு புரிந்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக கவர்ச்சியான கதை வடிவங்களில் புராண இதிகாசங்களென்றும் தமிழில் சமய குரவர்களால் அருளிச்செய்யப்பட்ட தேவார திருமுறைத் தொகுப்பு மற்றும் திவ்ய பிரமிந்தம் என்பவற்றை பக்தி இலக்கியங்களாகவும் வகுத்திருக்கின்றார்கள்.

இதைத்தவிர இறைவன் மீது மனமுருகி பக்தியை வெளிப்படுத்த எந்தெந்த மார்க்கங்களை அன்புள்ளங்கள் நாடுகின்றனவோ அவ்வவற்றால் இறைவனைச் சென்றடைவதற்கும் இந்துமதம் தடை விதிக்கவில்லை.இந்து மதத்தில் கூறப்படும் ஆசார விதிமுறைகள் அறுதியானவையல்ல. ஒரு விதிமுறையைப் பின்பற்றும் சாதகருக்கு மதம் என்ற ரீதியில் அது தொகுத்தளிக்கும் பிரமாணங்களே அவையாகும்.

ஒரு அரச அலுவலகத்தினைச் செம்மையாகக்கொண்டு நடாத்துவதற்கு சில முக்கிய சட்டப் பிரமாணங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. சில சமயங்களில் அச்சட்ட வரன்முறைகளுக்கு அப்பால் சென்றும் தாபனத்தின் கொள்கை குறிக்கோள் என்பவற்றிற்கு பிறழ்வு ஏற்படாவண்ணம் குறித்த நோக்கினை நிறைவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் வகையில் அதிகாரிகள் சில தற்றுணிபு நடவடிக்கைகளை மேற்கொள்வதுமுண்டு. இவை அவசியத்தையும் அவசரத்தையும் கருத்தில் கொண்டு அங்கீகாரம் பெறுகின்றன. அவ்வாறே பக்தி ஞானத்தைப் பெற்றுக் கொண்டு விட்ட ஆன்மாக்களும் இறைவன்பால் தாம் பூண்ட பக்தி மேலீட்டினால் அவனை அடைய முயலும் மார்க்கத்தை தனித்துவமாக கடைபிடித்து ஒழுகுவதும் உண்டு. இதனைச் சரியாக உணர்ந்ததனால் தான் இந்துமதம் "இதுதான் வரையறை" என்ற கட்டுப்பாட்டை விதிக்கவில்லை. பிரபஞ்சத்திற்கும் உண்டோ வரையறை?

## ஆ. அதிக கடவுளர் ஏன்?

இந்துமதம் உட்பட சில மதங்கள் தங்கள் வணக்கத்துக்குரிய முகூர்த்தங்களாக ஒன்றுக்கு மேற்ப்பட்ட உருவ வழிபாட்டினைக் கொண்டிருக்கின்றன. இதனைச் சிலர் கிண்டலாகவும் கேலியாகவும் வினவுகின்றார்கள். "ஒன்றே தெய்வம் ஒருவனே தேவன்" என்று கூறுகின்றீர்களே! பின்னர் எதற்காக பல கடவுளர்களை வணங்கி வருகிறீர்கள் என்று.

இந்தக் கேள்வியை விடுக்கும் ஒருவர் கூறுவதிலும் பொருள் இல்லாமல் இல்லை. உலகில் கடவுள் ஒருவரே. அத்தோடு இறையன்புக்கு வழி சமைத்துக் கொடுத்த குரு தேவனும் ஒருவனே என்ற கருத்தையே மேற்குறித்த வாசகம் சுட்டிக்காட்டுகிறது.

உலகத்தை உள்ளடக்கிய பிரபஞ்சம், ஆத்மா, திரோபதான சக்தி, பரம்பொருள் என்ற இவை அனைத்தும் ஒன்று சேர்ந்த நிலையான பொருளே இறைவன். ஆயினும் இந்த இறைவனைப்பார்க்கவோ, உணரவோ, அறிந்துகொள்ளவோ மனிதனுக்கு உள்ள பொறிகள் போதா அல்லது செயலற்றவை. மனம், வாக்கு, காயம், சித்தம் என்ற அனைத்துக்கும் அப்பாற்பட்டு அண்டம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பொருள் அளவில்லாதோர் ஆனந்த வெள்ளப்பொருளாக வியாபித்துள்ளான் இறைவன்.

கேள்வியைக் கேட்டவர் ஊனக்கண்களால் மட்டும் பார்க்கிறாரே அன்றி ஞானக்கண்களினாலல்ல.

அமீபா என்றோரு ஓரலகு நுண்ணுயிர் அங்கி இருக்கிறது. விலங்கியல் கற்ற மாணவர்கட்கு இது புரியும். இந்நுண்ணங்கியை நுணுக்குக்காட்டியின் உதவியின்றி சாதாரண கண்களால் காண்பது முடியாத காரியம். வெவ்வேறு சமயங்களில் வேறுபட்ட உருவங்களை இப்பிராணி அமைத்துக்கொள்ளும் இயல்பினது. இயங்கும் தொழில்சார்ந்த (movement) நோக்கத்தை மையமாகக் கொண்டே இது நடைபெறுகிறது. இந்தப்பிராணியின் தோற்றத்தை நுணுக்குக்காட்டியில் கண்டு வரைந்த ஒவ்வொரு வரும் அதன் உருவத்தை வேறு வேறு வடிவங்களில்தான் வரைந்திருப்பார்கள். ஆயினும் படங்கள் ஒரே பிராணியினுடையதே1 அத்தோடு அதன் மையத்தில் அமைந்துள்ள நீயூக்கிளியஸ் (Nucleus) எனப்படும் கரு மாற்றமடைவதில்லை.

இதேபோன்றுதான் ஒருமையில் உள்ள இறைமுகூர்த்தமான பரம்பொருளும் உலகம் உய்யும் பொருட்டு சமச்சீராக இயங்கி வரவும் அடியார்களின் அன்புக்குக் கட்டுப்பட்டும் அவரவர்விரும்பி அழைத்தவாறே பல தோற்றங்களை எடுத்து அவதார முகூர்த்தங்ாகளாக்கியுள்ளது. இந்த முகூர்த்தங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இறைவனல்ல. இறைவனின் எண்ணற்ற வடிவங்களில் இவை சிறப்பம்சம் பொருந்தியவை. ஆயினும் இறைவன் ஒருவரே.
இதுமட்டுமல்ல முக்குண நிலைகளில் உருவம், அருவம், அருவுருவம் என்ற பேதமாகவும் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் ஆகிய தொழில் நிமித்தம் பிரம்மா, விஷ்ணு, சதாசிவன், மகேஸ்வரன், உருத்திரன் என்ற தேவர்களாகவும் உயிர்கள் உய்யும் வண்ணம் தொழிற்பட்டு வருகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ) பசித்தோர் பலர் இருக்க பாலைக்கல்லில் கொட்டுவதா?

கோயில்களிலே கல்லினாலும் உலோகத்தினாலும் செய்யப்பட்ட உருவங்களை வைத்து வழிபடுவது பேதமை. அதைவிடப் பேதமை உணவுப் பதார்த்தங்களை வீணே அவ்விக்கிரகங்களின் மீது கொட்டி எறிவது. ஏழையின் வடிவில் இறைவனைக் காணலாம் என்றால் அவற்றை ஏழைக்கு கொடுத்து அதன் மூலம் அவர்களது பசியைப் போக்கலாமே என்கிறார்கள். அவர்கள் கூறுவது முற்றிலும் சரியே. ஆனால் ஒரே ஒரு தவறு. அதாவது தொடக்கம் இல்லாத முடிவினைப் பேசுகிறார்கள். ஏழையின் வடிவில் இறைவனைக் காண்பது மிகவும் அற்புதமான விடயம். ஆனால் அத்தகையதொரு அன்பு மேலீட்டுக்கு நமது மனம் படிஉயர்வு பெற்றிருக்க வேண்டுமே! பசியோடு நாம் உணவை உண்ணும் போது பக்கத்திலே வளர்த்தநாய் பார்த்துக் கொண்டிருந்தாலே அதனுடன் எரிச்சல்படும் மனித சாதியா பசித்தோர் முகம் பார்த்து உணவிடும்?

மண்டிக்கிடக்கும் மனித மனதை இந்த மேல்நிலைப்படிக்கு உயர பயிற்றுவிப்பதே இந்த நித்திய நைமித்திய கிரியாமுறையின் நோக்கமாகும். நட்ட கல்லையே கற்பனையில் இறைவனாகப் பாவித்து அதன் முன்னே அன்புடன் படைக்கும் அபிடேகப் பொருட்களை அர்ப்பணித்து நெஞ்சக் கனகல்லை நெகிழ்ந்துருக்கி ஈசனை மனதில் இருத்திக் கொள்ளும் உளவியல் சார்ந்த உபாயமே இதுவாகும். அவ்வாறு

மனம், அன்பு, இரக்கம், ஈகை என்ற நற்குணங்களில் பயிற்சி பெற்று பக்குவப்படுத்திக் கொண்டு விட்ட பின்பு மேற்கூறிய தர்மோபதேசம் பொருத்தமானதாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு ஆசை, காமம், குரோதம் என்ற அழுக்காறுகளால் கறைபடிந்து கிடக்கும் மனதைத் திருத்தி இறைவன்பால் ஒருங்குவித்து அன்பு பூண்டு ஒழுக உந்துவதற்கும் இந்தக் கல்லிலாலான அல்லது உலோகத்திலாலான ஒரு கருவி (Object) பெரிதும் துணை புரியும்

கணிதப்பாடத்தில் கேத்திர கணிதம் என்ற ஒரு பிரிவும் உண்டு அதில் தேற்றங்களை நிருபண ஆதாரங்களாகக் கொண்டு கேட்கப்படும் கணக்குகளை நிறுவும்படி மாணவர்கள் கோரப்படுவார்கள். தரவுகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றை பிரயோகித்து விடையாக நிறுவுவது இலேசுப்பட்ட காரியமாக அமையாது. இதற்கு மேலதிகமாக ஒரு கருவி வரைந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அக்கருவி எமது நம்பிக்கையின் அடிப்படையில் எம்மாலேயே வரையப்படுவதாகும். சரியான நியதிகளோடு வரையப்படும் கருவி மூலம் விடையை நிறுவுவது சுலபமானது மட்டுமல்ல சுவாரசியமானதும் கூட. இது போலவே நாம் நமக்கு விரும்பிய நம்பிக்கையானதும் பொருத்தமானதுமான இறை முகூர்த்தங்களை கருவியாக ஏற்று மனதில் தியானம் செய்து வரின் எம்மாலும் ஆன்மீக வாழ்வில் கடைத்தேற வழி பிறக்கும்.

சில மாணவர்கள் கருவி வரையாமலே விடை கண்டுகொள்ள முடியுமெனினும் இது சாமானியமானதொன்றல்ல. ஆதலால் சாதாரண மக்கள் வாழ்வில் இறைபக்தியை வளர்த்து ஆன்ம ஈடேற்றத்தைப் பெற்றுக்கொள்ள இறை சொரூபங்களும் விக்கிரகங்களும் இன்றியமையாதவைகளே. ஆதலால் இந்த உருவ வழிபாட்டு முறைமையை ஆத்மா + பரமாத்மா = பேரின்ப சேர்க்கை “அப்பறட்டஸ்” என்று கூடக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ) இந்து சமயத்தில் தொழில்சார் வகையில் கடவுளர் பிரிக்கப்பட்டுள்ளனரே இது எவ்வாறு சாலும்?

உலகியல் இன்பங்களை சிற்றின்பம்,பேரின்பம் என்று இருவகைப்படுத்தியுள்ளனர் எம்முன்னோர். புலன்வழிக்குட்பட்டு இலௌகீக வாழ்க்கைக்கே முற்று முழுவதாகப் பயன்படும் கல்வி, செல்வம், வீரம்,புகழ்,பதவி என்பன சிற்றின்ப வாழ்க்கைக்குள் அடங்குவன. அன்பு, அறம், ஈகை, தவம், முத்தி என்பன பேரின்ப வாழ்வினுள்அடங்குபவை. இந்து மதம் சிற்றின்பத்தை மட்டும் தெரிவிக்காது அதற்கும் மேலான முக்தியின்பத்தையும் அடைய வழி காட்டும் ஒரு சமயம் என்று முன்னர் கூறினோம். ஆதலால்தான் இவ்விருவகை வாழ்க்கை முறைகளையும் முறையே அது, இல் + அறம் என்றும் துறவு +அறம் என்றும் பேசுகின்றது. இவ்விரு வகை அறங்களும் சங்கமிக்கும் இடம் ஒன்றேதான்.

இல்லற வாழ்வில் மனிதர் தாமும் தம் உறவினரோடு சகல செல்வங்களையும் வசதிகளையும் பெற்று அற வழியில் வாழ வேணடும் என்னும் ஆசை கொண்டு விரத முதலாய பல மெய் தவங்களையும் பூசை அபிடேகம் போன்ற வேள்விகளையும் செய்து இயல்புள்ள மூவர்க்கும் துணையாக இருந்து இறைவனை வேண்டுகின்றனர். அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை என்று குறள் கூறுவதை நோக்கவும்.

இத்தகைய நிலையில் அன்பர்களின் வேண்டுகோளுக்கு இரங்கி இசைந்து அருள்பாலிக்க இறைவன் எடுத்துள்ள சிறப்பு முகூர்த்தங்களே சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை முதலான சக்தி வடிவங்களும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூர்த்திகளும் ஆகும். இவ்வடிவங்கள் சிறப்பான தேவைகளை இலகு வடிவில் உவந்தளிக்க வல்லன. உதாரணமாக, திணைக்களம் ஒன்றுக்குப் பொறுப்பாக பணிப்பாளர் இருக்கிறார். அவரே அத்தாபனத்திற்கு முழுப்பொறுப்புமுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான சேவை நலன்குறித்தும் சிறப்புத்திறமை நோக்கியும் தனக்குண்டான வேறுபட்ட கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அவற்றில் சிலவற்றை தகுதிவாய்ந்த சிலரிடம் பகிர்ந்தளித்துள்ளாரே. ஆயினும் பொறுப்புக்கள் அவரினுடையதே. அதியுயர் அதிகாரியை சந்தித்து பிரச்சினையை நேரில் விளக்குவதிலும் பார்க்க இடைநிலை அதிகாரிகளோடு கலந்துரையாடுவதில் காரியானுகூலம் அதிகம். இதே போன்றுதான இறைவனும் சில சிறப்பு முகூர்த்தங்களை ஏற்படுத்தி அவற்றின் வாயிலாக அவனது படைத்தல், காத்தல், அழித்தல்,அருளல், மறைத்தல் என்ற இன்னோரன்ன நித்திய கருமங்களை ஆற்றி வருகின்றான். இலௌகீய இச்சைகட்கு உட்படாத கடைத்தேறிய ஆத்மாக்களுக்கு சோதிப்பிரம்மமாக காட்சி தருகிறான்.

## உ) அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார். அன்பும் சிவமும் ஒன்றேயானால் இந்துமதத்தில் உயிர்ப்பலி கொடுப்பதை எவ்வாறு நியாயப்படுத்தலாம்?

இந்த ஐயவினா எழுவதில் நியாயம் நிரம்பி இருக்கிறது. இந்துமதம் யாருக்கும் வேள்வி செய்யும்படியோ அல்லது பலியிடும் படியோ கூறவில்லை.சித்த வைத்தியத்தில் சிரஞ்சீவி மூலிகைகளை மட்டுமல்ல, போதை தரும் அபின் போன்ற வஸ்த்துக்களையும் பாசாணம் போன்ற நஞ்சுப் பொருட்களையும் ஏன் பாம்பின் விஷத்தைக்கூடக் கூறி விளக்கியுள்ளது. காரணம் நல்லதும் கெட்டதும் இணைவதே பூரணத்துவம் இன்பமும் துன்பமும் இணைந்திருப்பதே வாழ்க்கை. அதேபோல இன்பம் - துன்பம், இம்மை - மறுமை, நல்லது - கெட்டது என்ற யாவற்றையும் விளக்கும் பூரணமதமே இந்துசமயம். அன்பினால் இறைவனை அர்ச்சிக்கும்படியே இந்துமதம் ஆலோசனை கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப்பிறவி அடைந்துவிட்ட அனைத்து உயிர்களும் மேலான முக்தியின்பம் நாடி உழைப்பதில்லை. அவ்வாறு அதனை அடைய விரும்புவதும் இல்லை. அவரவர் செய்த சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்னும் கர்மவினைப்பயனால் அவா என்னும் மாயையில் அமிழ்ந்து பல போகங்களையும் நுகரவே எண்ணில்லாத மனிதப்பிறவிகள் நாட்டம் கொள்கின்றன. அவ்விதம் அவை முயலாதொழியினும் உலகம் சமநிலை பெறமாட்டாதல்லவா? இப்போகங்களைப் பெற்றுக் கொள்ளும் உபாயமாகவே கடும் தவங்கள், விரதங்கள், யாகங்கள், வேள்விகள் அத்தோடு உயிர்ப்பலியிடுதலையும் புரிகின்றனர்.

இவ்வாறு பாதை விலகிச் சென்று விடுவதற்கு இறைவனது திருவருள் கிடைக்கப் பெறாமையே காரணம். "அவனருளாலே அவன்தாள் வணங்கி......" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதும் இதுதான். உயிர்ப்பலி இடுதல் இந்துமதத்தில் ஏற்பட்டுள்ள ஒரு துரதிஸ்டம் என்பது உண்மை. அதனை விலக்கவும் அதற்கெதிராக பிரசாரம் செய்யவும் துணிவோமாக.

## ஊ) இந்துமதமும் நாஸ்திகமும் அடிப்படையில் ஒன்றே.

இந்துமதம் கூறுவதும் நாஸ்திகம் என்னும் இறைமறுப்புக் கொள்கையான பகுத்தறிவு வாதம் அடிப்படையில் கூறுவதும் ஒன்றேதான்! ஏன் வியப்பாக இருக்கிறதா? உண்மை அதுதான். ஏனைய மதங்களுக்கும் இந்து மதத்திற்கும் இடையே உள்ள சிறப்பியல்பும் இதுதான்.

"சர்வ உலகிலும் இயற்கைதான் வியத்தகு சக்தி படைத்தது. அதன் பரிணாமமே உலகின் செயற்பாடு, வளர்ச்சி, தோற்றம், மறைவு என்ற அனைத்தும்" என்கிறது பகுத்தறிவு வாதமான நாஸ்திகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இறைவன் என்று எதுவும் தனியாக இல்லை. தன்னைத்தானே நான் யார்? என்று உணர்ந்து கொண்டு உள்ளத்தைக் கடந்து அப்பால் தெளியப்படும் பரமானந்த இன்பமயமே இறைவன்” என்கிறது இந்துமதம். அதுமட்டுமல்ல பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து நிலை பெற்றுள்ள பிரம்ம சொரூபமே அது என்றும் கூறுகிறது.

இந்த அடிப்படையில் இந்து மதமும் நாஸ்திகமும் இருவேறுபட்ட நோக்கில் சென்றாலும் அவற்றின் கொள்கைகளின் அடிப்படையில் ஒன்றுதானே? இதனால் இந்துமதம் ஆன்மீகத்தோடு மட்டுமன்றி பகுத்தறிவு வாதத்தோடும் இணைந்து உண்மைகளை வெளிப்படுத்துகிறதல்லவா?

நான் யார்? என்ற வினாவுக்கு இந்துமதம் அளிக்கும் தத்துவ விளக்கம் என்ன என்பதைப் பார்ப்போம்.

நான்(ஆத்மா) - அழியும் உடலுமல்ல
- அறிவை மயக்கும் உணர்வுமல்ல
- சித்தமுமல்ல
- நுண்ணறிவோ என்றால் அதுவுமல்ல
- இதயமும் அல்ல
- நினைப்போ மறப்போ அல்லது உணர்ச்சிகளோ தரும் வேறு எதுவுமல்ல.
- இவை அனைத்துக்கும் அப்பால் வேறுபட்ட ஒன்றுதான் நான்.

ஆகவே பிரம்மமும் நானும் வேறுபட்டவையல்ல.

இறைவன் என்பதற்கு இந்துமதம் கூறும் விளக்கத்தையும் பார்ப்போம்.

இறைவன்(பதி- எங்கும் நிறைந்தவன்
- எல்லாம் வல்லவன்
- எல்லாம் அறிந்தவன்
- விருப்பு வெறுப்பு அற்றவன்
- உருவம் பெயர் குணம் அற்றவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள்ளவன் உள்ளானும்
- இல்லானுமானவன்.

ஆகவே இறைவன் பிரம்ம சொரூபம்.

உலகம் பற்றிய இந்து சமய வியாக்கியானம் என்ன என்பதை நோக்குவோம்.

உலகம்(மயக்கம்)
- நிலைத்து நிற்கத்தக்கதெதனையும் கொண்டிராதது
- அழியும் தன்மைத்தாயது.
- மண், விண், காற்று, நீர், நெருப்பு எனும் ஐம்பூதங்களாலானது
- ஊன நடனத்தினையும் ஞான நடனத்தினையும் ஒருங்கே உடையது
- மாயா சக்தியின் தோற்றப்பாட்டில் மறைவது.
- படைத்தல், காத்தல்,அழித்தல், அருளல், மறைதல் என்ற பஞ்சகிருத்தியங்களையும் நடாத்தி வருவது.

மேற்கூறிய இறைவன், உயிர், உலகம் என்பவற்றை முப்பொருள் என சைவசித்தாந்தம் விளக்கி கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம் பற்றிப் பகுத்தறிவு வாதம் கூறும் தத்துவங்களுக்கும் இந்து சமயத் தத்துவங்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமைகள்.

| பகுத்தறிவு | இந்துமதம் |
|---|---|
| 1.இறைவன் என்று எதுவும் இல்லை. | ஆம் பிரம்ம சொருபமே அது |
| 2. இயற்கையே சர்வசக்தி | ஆம் பிரம்மத்திற்குள் எல்லா மூச்சும் அடக்கம் |
| 3. பொய்மையை மெய்மை என்று நம்பப்படுகிறது. | ஆம் மாயையின் தோற்றப்பாடு அது |
| 4. பக்தி நெறியல்ல சேவையே உயர்ந்த நெறி | சேவை மனப்பாங்கின் பிறப்பிடமே பக்தி |

ஆகவே பகுத்தறிவு வாதம் அல்லது நாத்திகம் போதிப்பனவெல்லாம் இந்துதர்மத்தின் கோட்பாடுகள். இவ்வுலகில் பெறும் இன்பமே நிலையானதென்பது நாத்திகத்தின் கோட்பாடு. அதற்கும் ஒருபடி மேலே சென்று ஆத்ம விசாரம் பெறுவதொன்றால் மட்டுமே நிலையான இன்பம் துய்க்க முடியுமென்பது இந்துமத தத்துவம்.

ஆகவே இவை ஒன்று மற்றொன்றின் உசாத்துணை.

சத் - சித் - ஆனந்தம்

## மதமாற்றமும் அதனை தடுத்து நிறுத்தும் உபாயங்களும்

"எவன் ஒருவன் பிற மதங்களை இகழ்ந்து தன்னுடைய மதங்களை உயர்வானதெனக் கொள்கிறார்களோ அவன் தன்னுடைய சொந்த மதத்தையே இகழ்ந்தவனாக கருதப்படுவான்" இந்தத்திருமொழியை அருளிச் செய்தவர் குருதேவர் ஸ்ரீ இராமக்கிருஸ்ண பரமஹம்ஸர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் இந்துமதமோ இந்துமதத்துறவிகளோ உலகில் தோன்றிய அனைத்து மதங்களையும் கௌரவமாக பார்க்கிறார்கள். மரியாதையுடன் நேசிக்கிறார்கள் என்பது வெளிப்படையாயினும் சில வெறிபிடித்த மதவாதிகள் தமது மதமே உயர்வானதென்று கருதி ஏனைய மதங்களை இகழ்ந்து வருவதோடு மதமாற்றத்தை தூண்டி அவற்றை நலிவடையவும் செய்கின்றனர். தற்போது இந்துமத அனுஸ்டானர்கள் பெருமளவில் ஏனைய மதவாதிகளால் மாற்றம் செய்யப்படுகிறார்கள் இதனைக் கண்டு வாழாவிருப்பினும் அடக்கமான சில யுக்திகள் மூலம் எம்மவரை மதமாற்றத்திலிருந்து தடுக்க முடியுமென்ற எதிர் பார்ப்பில் ஒரே சம்பவத்தை வைத்து இரு கதைகளாக கற்பனையில் புனைந்து தருகிறேன். படித்துப்பாருங்கள்.

**கதை 01**

அது ஒரு கோயில். மகோற்சவ காலம். எங்கும் ஒரே சனமும் சந்தடியும். அங்கே பக்தியொலி மட்டுமல்ல வியாபார ஓசையும் காதைத் துளைத்துக் கொண்டிருக்கிறது. வெளிப்பிரகாரத்தில் நின்று கொண்டிருக்கும் பெரிய அரச மர நிழலில் ஒரு தபசு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் சிந்தனை வயப்பட்டவராகக் காணப்படுகிறார். தோற்றமும் உடையும் அவரைப் பித்தரைப் போன்று எடுத்துக்காட்டுகிறது. ஆயினும் அவரது முகத்தில் ஒரு காந்த சக்தி! அற்புதமான கடவுள் பக்தியின் வெளிப்பாடு. அவரைச் சூழ்ந்து சிறுவர் கூட்டமொன்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறது.

ஆலய தரிசனம் என்ற போர்வையில் அவ்வழியால் வந்த ஒருவரது கண்களில் இந்தக் காட்சி பட்டு விட்டது. தூய வெள்ளை வேட்டியும் விபூதிப் பூச்சும் விலையுயர்ந்த தங்க ஆபரணங்களும் அவருக்கு மிகுந்த பொலிவை ஏற்படுத்தி இருந்தது. அவர் ஒரு செல்வந்தராக இருக்க வேண்டும். அவரது பார்வையில், நடையில் ஒரு வித அலட்சிய உணர்வு தென்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலே இருந்த சிற்றூண்டிக்கடையில் சில இனிப்புக்களை வாங்கிக் கொண்டார். தபசியை சூழ்ந்து நின்ற சிறுவர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளித்தார். சிறுவர்களும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டனர். இனிப்பான மிட்டாய்களை சுவைத்த அவர்கள் தம்மையே மறந்து போயினர். தனவந்தரின் தாராள மனப்பாங்கை எண்ணி வியந்து போற்றினர்.

தனவந்தர் சிறுவனொருவனை மெதுவாக அழைத்து அங்கே இருக்கும் முதியவர் யார் என்று வினா எழுப்பினார். "இவர் தபசு" என்று பதிலளித்த சிறுவனை மறுத்து "இல்லை இல்லை. இவர் ஒரு பைத்தியம். சமீபமாக நின்றால் துரத்திக் கடிப்பார்" என்று அவர்களை மனமாற்ற முயன்றார். சிறுவர்களோ தனவந்தரின் கபடத்தினை உண்மையெனக் கருதி விட்டார்கள்.

ஒரு சிறுவன் ஏனையவர்களிலும் சற்று விசமம் நிறைந்தவன், எதிர்பாராமலே அம் முதியவர் மீது ஒரு கல்லை விட்டு வீசி எறிந்து விட்டான். பெரியவரின் நெற்றியில் பட்டு சில்லென செங்குருதி சீறிப்பாய்ந்தது. பெரியவரோ எது வித சலனமும் இன்றி எப்போதும் போல அப்படியே இருந்தார்.

மேலும் பல சிறுவர்கள் ஒன்று சேர்ந்து அவர் மீது மணலை வாரி இறைத்தனர். அதற்கும் பெரியவர் ஒன்றும் செய்யவில்லை. இறுதியாக "பைத்தியம், ஃபைத்தியம்" என்று உரத்துக் கத்திக் கொண்டு அவ்விடத்தை விட்டு அவர்கள் ஓடி மறைந்தனர்.

தனவந்தருக்கோ குதூகலம். தன்தந்திரம் நன்றாக வேலை செய்தது என்ற திருப்தி. புன்முறுவலோடு கோயிலுக்குச் சென்று இரு கரங்களையும் குவித்து ஒரு மெய்யடியார் போல் வழிபாடு செய்தார். எல்லோரும் அவரது பக்தியை மெச்சி புகழ்ந்துரைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய கதையில் இடம்பெறும் கதாபாத்திரங்களான

1. தபசியை - இந்துமதம் என்றும்
2. சிறுவர்களை - இந்துமதத்தில் இருந்து இன்று மதம் மாறுபவர்கள் என்றும்
3. தனவந்தரை - மதமாற்றத்தை தூண்டும் பிற சமயத்தவர் என்றும்
4. இனிப்பு மீட்டாயை - மதமாற்றத்துக்கு பயன்படுத்தும் வசியப் பொருள் என்றும்
5. தனவந்தரின் தோற்றத்தை - மதமாற்றத்திற்காக மயக்கும் போலி வார்த்தைகள் என்றும்

கொள்ளுவோம். இன்றைய நிலையில் இந்துமதம் எதிர் நோக்கும் மதமாற்ற நடவடிக்கைகளின் தாக்கம் புரியும். இந்துமத பிரசாரர்களும் அபிமானிகளும் மதமாற்ற நடவடிக்கைகளை எதிர்த்து எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும். எமது செய்கையினால் எவ்விதம் பிறருக்குத் தொந்தரவில்லாததொரு நிலை உருவாகும் என்பதைச் சித்தரிக்கும் வகையில் மேற்குறித்த அதே கதையை மாற்றிச் சிந்தித்துப் பார்ப்போம்.

## கதை 02

நடந்து முடிந்துபோன எல்லாவற்றையும் இரண்டு கண்கள் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றன. தபசியின் நிலைக்காக அவை வருந்துகின்றன. எப்படியாவுதல் உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்த போதிலும் தனவந்தரை நேரடியாகச் சாடிச்சண்டையிடும் பக்குவத்தில் அவை இல்லை. அத்தோடு செல்வச் செழிப்பும் போதா. ஆயினும் அறிவுச் செல்வம் நிறையவே உண்டு. நிதானமாக சிந்திக்கின்றன.

"நடந்து முடிந்த சம்பவத்திற்கு காரணம் என்ன? இதனை எவ்வாறு அணுகுவது?" என்று ஆராய்கின்றன. தெளிவும் திட்டமும் உருவாகுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களோடு நட்புப் பூண்டு அவர்களோடு அவர்களாகவே மாறி சிறு விளையாட்டைச் சொல்லிக் கொடுக்கின்றன. ஆர்வமிகுதியால் சிறுவர்கள் சிரத்தையுடன் பின்பற்றுகின்றனர். நல்ல பண்பாட்டு விழுமியங்களையும் ஒழுக்க முறைமையையும் அந்த விளையாட்டினூடாக ஆங்காங்கே சிறுவர்களின் மனதில் விதைக்கின்றன. புழுதி விதைப்பில் அமிழ்ந்து கிடந்த நெல் விதை மழையைக் கண்டதும் செழித்து அரும்பு விட்டு வளர்வதைப்போன்று சிறுவர்கள் ஆவலோடு அவற்றைப்பற்றிக் கொண்டனர். ஆசாரம் வாழ்வுக்கு அடிப்படை என்பதை இப்போது அவர்கள் விளங்கிக் கொள்கின்றனர். பெரியவர்களைக் கனம் பண்ணுதல் நம்மை வாழ்விக்கும் என்பதையும் அறிந்து கொண்டனர். பாவம், புண்ணியம் என்ற இருவகைக் கர்மங்களையும் உணர்ந்து கொண்டனர். இவை அனைத்தும் சார்ந்த தொகுதியே "இறை அம்சம்" என்பதும் அவர்களுக்கு புரிகிறது.

அடுத்தநாள் ஆலய உற்சவத்தின் போதும் அதே தனவந்தர் அலங்காரமாக உடுத்துக் கொண்டு அங்கு வந்து கொண்டிருக்கிறார். சிறுவர்கள் தபசியைச் சுற்றி இருப்பதைக் காண அவருக்கு குதூகலம் பன் மடங்காக அதிகரிக்கிறது. இன்றும் தன் சாகசத்தை நடாத்திக் காட்ட சந்தர்ப்பம் என்பதே அதற்குக் காரணம்.

சுவையுள்ள சிற்றூண்டி வகைகள் வாங்கி வருமாறு அங்கே இருந்த சிறுவனொருவனை ஏவுகிறார். பணத்தை பெற்றுக் கொள்ளாமலே பையன் எதற்கு......? என்ற பான்மையில் பார்வையால் அவரை வினவுவது தெரிகிறது.

அவன் பேசவும் இல்லை, அவ்விடத்தை விட்டு நகரவும் இல்லை. இப்போது மற்றொரு பையனை அழைக்கிறார். தனவந்தர் அவனும் அதற்கு செவி சாய்க்கவில்லை. தனவந்தருக்கோ சீற்றம் ஏற்படுகிறது. சிறுவர்களை எள்ளி நகையாடுகிறார். "பித்தனை சுற்றி இருப்போரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பித்தர்களே" என்று வசை மாரி பொழிகிறார்.


"பித்தனென்றாலும் அவன்
பேயனென்றாலும்
சித்தமெல்லாம் அவன் பால்
செல்லுதம்மா" என்று அமைதியாகப் பதிலளிக்கின்றனர்.

"சிந்தனை தெளிவு பெற்றால் சீரிய வாழ்க்கை வந்தமையுமையா" என்றும் கூறுகின்றனர். செல்வந்தருக்கோ ஏமாற்றம் - அவமானம் - வைராக்கியம். மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்று போய் விடுகிறார்.

தபசியோ சலனம் எதுவுமின்றி அப்படியே மோனநிலையில் அமர்ந்திருக்கின்றார். சிறுவர்கள் அவரது காலடிகளில் விழ்ந்து வணங்குகிறார்கள். தபசியின் ஆசீர்வாதம் அவர்களுக்கு வாழ்த்துக்களாகின்றது.

## பிரபஞ்சம் என்னும் அண்டம் கடந்த வெளியும் அதனை உருவமைப்பில் இறைமுகூர்த்தமாக்கி வழிபட்டுவரும் இந்துமதத்துவமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்ச சொரூபமான இறைவனை இந்துமதம் சிவனாக உருவாக்கம் செய்து வழிபாடியற்றி வருகிறது. இறை உணர்வு பெற்ற ஞானிகளின் தேவார, திருவாசக, புராண இதிகாசங்களில் இவ்விறைவனது திருச் சொரூபம் நடராஜப் பெருமானாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அவர் ஆடுகின்ற ஆட்டம் ஞான நடனம். அவருக்கமைந்த முக்கண்களில் ஒன்று சூரியன். கங்கையை தலையில் அணிவதால் அதுவே பூவுலகம். சந்திரனை தூக்கி தலையிலே அணிந்திருக்கின்றான்.

பிரபஞ்சத்தை இறைமுகூர்த்தமாகிய சிவதாண்டவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன்பே எமது ஞானிகள் நிச்சயித்துக் கூறிவைத்த இறை அம்சங்களுக்கும் இப்போது விஞ்ஞானம் விளக்கிக் கூறும் பிரபஞ்ச தோற்றத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமையை அறிந்து கொள்ளமுடிகிறதல்லவா? பிரபஞ்சத்தில் உள்ள கோள்கள் ஞாயிறுத் தொகுதியில் சுற்றி சுழன்று வருவதை ஆனந்த தாண்டவம் உருவகிக்கின்றது.

## இந்துசமயத்தில் இல்லாதது எது?

அர்த்தமும் அறிவும்மிக்க இந்துநெறி அறிவிலிகளின் செய்கைகளுக்கு உட்பட்டு அர்த்தமற்ற இந்துமதமாக மாறிக்கொண்டிருக்கிறது. இந்துமதம் மானிட சமூகத்திற்குத் தெரிவிக்காத கருத்து எது? எதுவுமே இல்லை. ஒரு மதம் என்ற நிலையில் இருந்து கொண்டு தெரிவிக்க வேண்டிய எல்லாவற்றையுமே எடுத்து விளம்பியுள்ளது. மனிதனுக்கு பரம்பொருளைப்பற்றியும் அதனை அடைவதற்கு பக்தி செலுத்தும் முறைமையையும் மட்டும்தானா கூறியுள்ளது? இல்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அது நுட்பமாக அலசி ஆராய்ந்து நற்கருத்துக்களை நயம்படவே எடுத்துக் கூறியுள்ளது. பிள்ளை பிறந்துவிட்டதா? மாங்கல்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியா? கர்ப்பிணியா? மூப்பா? பிணியா? சாக்காடா? குடும்பத்தலைவனுக்குள்ள கடமைகளா? இல்லறத்தானுக்குரிய கடமைகளா? தந்தை, மகன், மனைவி, சுற்றம் என்றிவர்களுக்குரிய கடமைகளா? பொதுக்கடமைகளா? இவை எதைத்தான் அது விட்டு வைத்திருக்கிறது?

எல்லாவற்றையுமே எடுத்தியம்பிய இந்துமதம் தன்னை விட்டு சாதகர்கள் அகன்று போகாமல் இருக்கத்தக்கதாக தனக்கென்று ஒரு தற்பாதுகாப்பு அரண் எதையும் புகுத்தியுள்ளதா? இல்லை, என்றால் இல்லாத ஒன்று இந்து மதத்தில் இது ஒன்று தான்.

"வான் முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க
குறைவில்லா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்."

மேற்கூறிய இந்தப் பாடல் ஒன்றே இந்து மதத்தின் உயர்ந்த இலட்சியத்தை உலகமும் உலக மனிதர்களும் அறிந்து கொள்ளப் போதுமானது இந்தப் பாடல் மூலம் இந்து தர்மம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தையோ இடத்தையோ அரசாங்கத்தையோ ஆட்சியையோ குறித்துக் கூறாமல் உலகமெங்கும் வாழும் மக்களின் வாழ்க்கையும் வளமும் மேலோங்கக் வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றது அதுமட்டுமல்ல, அறநெறிகளை உள்ளடக்கிய சைவமதம் பரவவேண்டாம் அதில் பொதித்துள்ள மேலான நீதி பாரெல்லாம் விளங்கட்டும் என்றே கூறுகிறது. இப்படிப்பட்ட ஒரு சமயம் உலகில் இந்துதர்மத்தை விட வேறேது? இது அர்த்தமற்ற ஒரு மதமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்க வேண்டிய இந்துசமய நூல்கள்

இந்து சமயம் பற்றி எழுந்துள்ள நூல்களின் எண்ணிக்கை அதிகம் அவற்றில் பெரும்பாலானவை ஆரம்ப நிலையிலுள்ள ஒரு இந்து மத சீலரின் உளப்பாங்கை அறிந்து கொள்ளாத வகையில் அம்மதத்தில் கூறப்பட்டுள்ள சிக்கல் தன்மை கொண்ட தத்துவ விளக்கங்களையும் இலக்கிய விமர்சனங்களையும் முன்நிறுத்தியே நூல்களாக விரிந்துள்ளன. இதனால் அவற்றைப் படிப்பதற்கோ படித்து விளங்கிக் கொள்வதற்கோ சக்தியற்றவர்களாக பலர் இன்று இருந்துவருகின்றார்கள். இன்று இந்துமதம் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி போனதற்க்கு அடிப்படை காரணங்களில் இதுவும் ஒன்றுதான். இந்துமதம் மீண்டும் செழிப்புற்று மிளிர வேண்டுமாயின் முதலில் கிராமம் தோறும் வாழும் சாதாரண இந்துமக்களிடம் அவர்களது மதம்பற்றிய அறிவு வளர்ச்சி காண்பதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

கோயில்களில் திருவிழாக்களை செய்வதும் ஆராதனைகளை நிகழ்த்துவதும் மட்டும் இந்நோக்கினை நிறைவுசெய்ய உதவமாட்டா. அத்தோடு நாம் உண்டு; நமது வழிபாட்டு முறை உண்டு என்று தனித்தனியாக ஒதுங்கி இருப்பதும் இந்துமதம் சீரழிந்து செல்வதற்கு உகந்த ஒரு வாய்ப்பாக அமைந்து விடுகிறது.

இன்று இந்துமத ஆலயங்கள் பலவற்றில் ஒற்றுமையீனம் மலிந்து ஊழல் குற்றச்சாட்டுகள் ஓங்கி வளர்ந்து அவை பக்தியற்ற சூழலை தோற்றுவிக்குமோர் வியாபாரத்தலமாக காட்சி தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் என்றால் தலைவனின் வீடு என்றும் ஆலயம் என்றால் ஆணவம் ஒடுங்கும் இடம் என்றும் பொருள் கொள்ளப்பட்ட நிலைபோய் ஒவ்வொருவரும் தத்தமது புகழையும் வீரியத்தையும் அடாவடித்தனத்தையும் காண்பிக்கும் ஒரு களமாக மாறியுள்ளது என்பதை கூறித்தான் தெரிய வேண்டும் என்று இல்லை.

ஆகவே இந்நிலை தொடருமானால் இந்துமதம் மருவி சீரழிந்து இல்லாமல் போய் விடவும் இந்துக்கள் வெறும் ஜந்துக்கள் போல் சுபீட்சமற்ற நிலையில் வாழ வேண்டும் என்ற கட்டாயம் தோன்றலாம்.

இந்நிலை மாற வேண்டுமானால் இந்துக்கள் அவரவர் கிராமங்களில் ஒன்றிணைந்து இந்துமதம் பற்றிய அறிவினை முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்தகையதொரு முயற்சிக்கு ஊன்று கோலாக அவ்வக் கிராமங்களில் அமைந்துள்ள இந்துக் கோயில் கட்டமைப்புகள் செயற்பட வேண்டும்.

அதற்கான ஒரு எளிமையானதும் பணச்செலவு ஏற்படாததுமான முயற்சி ஒன்று உண்டு. அதாவது இந்து மக்கள் மத்தியில் நிகழ்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கும் பண்டைய கால சமய அனுஸ்டான விதிமுறைகளுக்கும் இடையே காணப்படும் இடைவெளி பெரிதாக இருப்பதனால் அவர்கள் மனதில் மதம் பற்றிய பல சந்தேகங்கள், நம்பிக்கையின்மைகள் இணக்கப்பாடின்மை தோன்றி மலிந்துள்ளன. இவற்றைத் தீர்த்து வைத்தால் அன்றி இந்துமத சீலத்தில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்பமுடியாது.

மாதம் ஒருமுறையேனும் பொதுமக்கள் மத்தியில் இந்துமத வளர்ச்சி பற்றிப் பிரலாபித்து இறுதியில் அவர்களால் விண்ணப்பிக்கப்படும் சந்தேக வினாக்களுக்கு வித்தகர்கள் மூலம் சரியான ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கங்களை அளித்து வரும் போது நாளாவட்டத்தில் கிராமமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நீரோட்டத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுவதோடு அவர்களாகவே முயன்று தேடலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும் இடமுண்டு.

இன்று பெரும்பாலான ஆலயங்களில் ஒலிபெருக்கி வசதி அமைந்திருப்பதனால் அதனையும் இச்சிறந்த பணிக்கு உபயோகித்துக் கொள்ள இயலும். இவ்வாறு கிராமம் கிராமமாக எழும் இந்துமத எழுச்சி அலை நாளாவட்டத்தில் மதமாற்றத்திற்கு எதிராக தாமாகவே போராட கூடும் என்பதோடு ஆலயங்களில் இன்று இடம் பெற்றுவருவதாக கூறப்படும் அனைத்து விமர்சனங்களையும் இல்லாது ஒழித்து விட வாய்ப்பும் உண்டு. இதன் மூலம் கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று நடப்பது போல் சண்டையின்றி வழக்கு இன்றி கோயில் திருப்பணிகள் கைகூடுமல்லவா?

இந்துசமய அறிவினை மக்கள் மத்தியில் இலகுவாக வளர்த்தெடுக்க உதவக்கூடிய நூல்களில் சிலவற்றையும் இங்கு குறிப்பிட விளைகின்றேன்.

1. **திருக்குறள் :-** உலக மறையாக எற்றுக்கொள்ளப்பட்ட இந்நூல் ஐந்தாம் வேதம் என்று போற்றி புகழப்படுகிறது. 1330 குறட்பாக்கள் அடங்கிய இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையுமே தெளிவிக்கிறது. அடுத்து வரும் வீடு பேற்றை இது தொட்டு நிற்கவில்லை. காரணம் இம் மூன்றும் சேரும் போது நான்காவதான வீடு பேறுதானாக வந்தமையும் என்ற நம்பிக்கையினால் தான். திருக்குறளில் தெரிவிக்கப்படாத. அறநெறி வேறெதிலுமே இல்லை. அதுமட்டுமல்ல முக்காலத்திற்கும் உதவும் ஆன்மீக நெறியும் உலகியல் அறிவு நெறியும் இதன் கண்ணே நிறைந்துள்ள ஒரு அறிவுப் பெட்டகம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மகாபாரதம், இராமாயணம்** :- இந்த இரு இதிகாச நூல்களிலும் கூறப்பட்டுள்ள அறம், அறிவு, ஆன்மீகம் வேறு எங்குமே பெற்றுக்கொள்ள முடியாதவையாகும்.

**3. சத்திய சோதனை**:- அண்ணல் மகாத்மா காந்தி அவர்களால் எழுதப்பட்டதுதான் சத்திய சோதனை என்ற அரும்பெரும் சுயசரிதை நூல். பொய்யுரையா மன்னனாம் அயோத்தி அரிச்சந்திரனை நாம் நேரில் காணவில்லை. ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் சாதாரண மனிதனாகப் பிறந்து வாழ்ந்து பொய் சொல்லாத் தெய்வமாக மிளிர்ந்த காந்தியடிகள் அவரது வாழ்வில் இடம்பெற்றதாக கூறப்படும் அத்தனை விடயங்களையும் ஒன்று விடாமல் உண்மைக்குண்மையாக யாத்து சத்திய சோதனை என்ற பெயரில் எமது நெஞ்சத்தை நெகிழ்ந்துருக்க செய்வதோடு இறை உணர்வினையும் ஏற்படுத்த உதவும் ஓர் ஔடதம் என்றால் மிகையில்லை.

இந் நூலைத்தனித்தனியாக படிக்க முடியாவிட்டாலும் சிலர் சேர்ந்து கூட்டமாக கலந்துரையாடல் மூலம் சிறந்த பயனை எய்த முடியும்.

## இறைவணக்கம்

இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு உலகத்தையும் அதன் மீதுள்ள அத்தனை விடயங்களையும் படைத்தான் என்றும் அவற்றைக் கையாண்டு தன்னை வந்தடைய மனிதனை உருவாக்கினான். என்றும் இந்துமதம் மட்டுமல்ல கிறிஸ்த்தவம், இஸ்லாம், புத்தம் ஆகிய எல்லா மதங்களும் ஒரு சேரக் கூறுகின்றன. ஆகவே மனிதனுக்கு இறைவன் வல்லமைகளைக் கொடுத்துள்ளான். அதற்கு உட்பட்டவற்றை அவனே தீர்த்துக் கொள்ள வேண்டியவனாகின்றான். ஆசை, காமம், குரோதம், மதம், மாச்சரியம் என்ற உணர்வுகளை அவன் வேண்டுமென்றே தேடிக்கொண்டு அதற்கு உதவி புரியும்படி இறைவனை வணங்குவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிறவி எடுத்த நோக்கத்திற்கு எவ்வித பயனும் இல்லை. ஆகவே நாம் இறைவனை வணங்கும் போது பின்வரும் அடிப்படையில் எமது பிரார்த்தனை அமைய வேண்டுமென்றே மெஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர்.

## பிரார்த்தனை

இறைவா இதுவே எனது பிரார்த்தனை
மனதில் புரையோடிக்கிடக்கும்
இழிகுணங்களை வேரோடு களைந்து விடுவாயாக

நாளும் எற்படும் சுகங்களையும் துக்கங்களையும்
சாமான்யமாக அணுகத்தக்கதாக வல்லமையை
அருள் புரிவாயாக

எனது இதயத்தில் ஊற்றெடுக்கும் அன்பை
பயனுள்ள சேவையில் அர்ப்பணம் செய்யும்
ஆற்றலைத் தா

ஏழைகளைக் கண்டு முகம் சுழிக்காத அத்தோடு
அடக்கு முறைக்கு அடிபணியாத பலத்தை
அருள்வாயாக

நாளாந்தம் எதிர் நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும்
மேலாக சிந்திக்கத்தக்க சிறந்த மனப்பக்குவத்தை
அருள்வாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக எனது ஆற்றல்
அனைத்தையும்
அன்போடு உன்னிடம் அர்ப்பணிக்கும் பேறை எனக்கு
அருள் தா

- வணக்கம் -
ஓம் நமசிவாய

# அத்தியாயம் 05
# முடிவுரை

ஆதவனைக்காணும் போது ஆம்பல் மலருகிறது. வசந்தம் வந்த போது சோலைக் குயில்கள் பாடிக்களிக்கின்றன. கார் முகிலைக் கண்ணுற்ற போது கான மயில் தோகைவிரித்து ஆடி மகிழ்கிறது.

ஒன்று மற்றொன்றால் கவர்ந்து களிப்புறும் இயல்பை இயற்கை நமக்கு விளக்கும் விதம் இது.

இரும்பு - காந்தம், இதுகூடஇயற்கையின் நிகழ்வுதான் . ஆனால் மனிதர்கள் மட்டும்தான் ஒருவரை மற்றவர் காணும் போது தூர விலகி ஓடுகிறார்கள், பொறாமை கொள்கிறார்கள், அல்லது குழிபறிக்கிறார்கள். இது இயற்கையின் நியதியல்ல. சிந்திக்கும் ஆற்றல் மனிதனுக்கு கற்றுக்கொடுத்ததோர் பாதக விளைவே இவைகள்

உலகம் முழுவதும் வாழும் மனிதர்கள் ஒரே குலம். நாயிடம் அன்பு காட்டி அள்ளி அணைக்கிறார்கள். பூனையிடம் பாசம் வைத்து கொஞ்சி மகிழுகிறார்கள். ஆனால் வறுமையிலே உழலும் சக உதிரமான மனிதனை மனிதன் தூஷிக்கின்றான். இது விந்தைகளுள் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை! ஏன்? அவனது மனதில் இரக்கம் இல்லையா? கனிவு ஏற்படவில்லையா? அப்படியானால் நாய்க்கும் பூனைக்கும் பாசத்தை பங்கு போட்டுக்கொள்ள எங்கிருந்து வந்தது அன்பு ஊற்று? வெள்ளாட்டின் மீது கரிசனை செலுத்துகின்றான் என்றால் அதற்கு அர்த்தம் இருக்கலாம். மாமிசமாகப் புசிக்க நினைக்காத நாய், பூனைகளை வாஞ்சையோடு அணைக்கிறானென்றால் அது நிச்சயமாக அவனது இதயத்தில் இருந்து ஊற்றெடுக்கும் அன்பின் நிமித்தமாகவேதான்.

மனிதனது செயல்களுக்கெல்லாம் மூலகாரணமாக அமைவது அவனது சிந்தனைகள். சிந்தனைகளின் இருப்பிடம் அவனது சித்தம் அல்லது மனம்.

மனம் தாமரைத்தடாகம் போன்றது. அழகிய நறுமணம் கொண்ட மலர்கள் பூத்துக்குலுங்கும் இடமும் அதுவே. அங்கே தெளிந்த முத்துப்போன்ற நறுநீர் செறிந்திருக்கும். பசும் புற்களும் அழகிய சோலைகளும் சூழப்பெற்ற இடம். ஆனால் ஆழத்தில் அழுக்குப் படிந்த சேறும் சகதியும் மூடி மறைக்கப்பட்டுள்ள இடமும் அதுவே. இந்த சேற்றின் ஆழத்தில் இருந்துதான் வனப்பு மிக்க நறுமணம் கமழும் தாமரை மலர்கள் பூக்கின்றன.

இந்த மலர்கள் தான் தடாகத்திற்கே மதிப்பையும் உயர்வையும் ஏற்படுத்துகின்றன. சிப்பியிலே முத்துக்கள் வெளிவருவது போன்றே மாயையின் ஆளுமைக்குள் தான் ஞானமும் பிறக்கிறது. அதனைப் பிரதிபலிக்கவே இந்து ஆலய கோபுர சிகரங்களில் சிற்றின்பம் தரத்தக்க செயல்பாடுகளை விளக்கி ஒப்பற்ற பேரின்ப மோட்சத்தை அடையும் மார்க்கம் துல்லியப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடாகத்தின் ஓரமாகப் பார்த்தோமாயின் ஆங்காங்கே சில மரங்கள் நெடிது வளர்ந்து கிளைவிட்டுப் பூத்துக் குலுங்குகின்றன. மலர்கள் கூட வெள்ளை வெளேரென கொள்ளை கொள்ளும் அழகுடன் கொத்துக் கொத்தாகப் பூத்து நிற்கின்றன. அவற்றில் இருந்து உருவாகும் கனிகள் கூட பெரிதாக உண்பதற்கு பெருவிருப்பத்தை ஏற்படுத்துவனவாக காய்த்துக் குலுங்கி நிற்கின்றன. இந்தக் கனிகள் அவற்றின் தோற்றத்துக்கேற்ற இனிமையைத்தருவதில்லை. அவை உயிரையே இரக்கமின்றிப் பறித்து விடும் அரக்கக்குணம் கொண்டவை. இது மாயையின் பிரதிவிம்பம்.

மனித மனமும் இந்த நறுநீர்ச்சுனை போன்று அன்பும் இரக்கமும் உடையதுதான். தூயவெண்முத்து நீர் போன்ற களங்கம் அற்றது தான். அழகிய மணம் வீசும் தாமரை மலர் போன்ற உயரிய பண்புகள் நிறைந்ததுதான். ஆனால் ஆசை, பாசம், சுயநலம் என்று ஆழமாக அடியில் பதிந்து கிடக்கும் சேறுகளாலும் பொறாமை, சந்தேகம், இறுமாப்பு என்னும் நச்சு விதைகளாலும் இந்தப் புனிதமான மனம் என்னும் நீர்ச் சுனை மாசுபடுத்தப்படுகிறது.

பலகாலம் முயன்றும் நன் + செய் நிலமானது எதிர்பார்த்த பலனைக் கொடுப்பதில்லை. அதற்குமாறாக புன்செய்யோ முயற்சி எதுவுமின்றியே முழுப்பலனையும் அளிக்கிறது. தோட்டத்திலே வளர்க்கப்படும் கனி மரங்கள் சிறிது கவனிப்புக்குன்றினாலோ இறந்துபோய் விடுகின்றன. ஆனால் காட்டில் பழம் சொரியும் மரங்கள் கவனிப்பின்றியே பயன் தருகின்றன. மனித மனதில் காணும் விளைவுகளும் அவ்வாறானவைதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகவே இந்துமதம் பல கோட்பாடுகளை நிறுவியும் சித்தாந்தங்களைப் புனைந்தும் அனுஸ்டான விதிமுறைகளைப் புகுத்தியும் விளக்கங்கள் பலவற்றை அளித்து வருகின்றன. இறை உணர்வும் (self realisation) விடுதலையும் (Liberation) பெற்று விட்ட ஆத்மாவுக்கு இத்தகைய வழிமுறைகள் எதுவும் தேவையற்றவை.

நல்ல சிந்தனைகளும் பண்புகளும் வளர்ச்சி காணவேண்டுமானால் பெருமுயற்சி தேவை. தீயநெறிகளும் துர்நோக்கங்களும் துரித வளர்ச்சி கண்டு மனிதனின் இயல்பையே போக்கி விடும். இயற்கையாகவே நற்குணங்கள் நிரம்பப்பெற்ற மனங்கள் மட்டும் பிரதிபலன் கருதாமலே சேவையை வாரி வழங்குகின்றன.

மனிதர்களில் பெரும்பாலானவர்கள் பிறர் மீது வெளிப்படும் குற்றம் குறைகளையே நன்கு கண்டு கொள்ளுகின்றனர். தம்மீது ஆயிரம் குறைபாடுகள் இருப்பதை அவர்கள் பராமுகமாக இருந்து விடுகின்றனர். ஆழமாக உள்நோக்கிப் பார்க்க மறுக்கின்றனர்.

ஆன்மீகத்தின் அடி அத்திவாரமே இதுதான். தன் குறைகண்டு அதைக்களைந்து பிறர் குறைகாணாப்பெருநோக்கே அதுவாகும். இந்த நிலை அமையப்பெற்றுவிட்டால் மனிதர் தெய்வநிலையை அடைந்து விடுகின்றனர்.

இந்த உலகம் பல உயிர் வாழும் மற்றும் உயிர் வாழா பல்லின வஸ்த்துக்களால் நிரம்பப்பெற்றிருக்கிறது. இவை அனைத்தையும் இயங்கச் செய்யும் அல்லது பராமரித்து வரும் மேலாண்மைச் சக்திகளாக பஞ்சபூதங்கள் எனப்படும் நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகியவைகளே செயற்படுத்தி வருகின்றன. இவையும் உயிரற்ற வஸ்த்துக்களுள் அடங்குவனவே. எனினும் இயல்பாகவே பெரும் வல்லமையைப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் எப்பொழுதும் தாம் பிறவியாக எடுத்துள்ள இந்தப் பாழும் உடம்பையே "தாம்" எனக்கருதுகின்றனர். அதுதான் இல்லை. உடல்வேறு. உயிர்வேறு. எவ்வளவுதான் விளக்கங்கள் அளித்த போதிலும் அவர்களது நம்பிக்கை இக்கொள்கையினின்றும் அற்றுப்போய்விடுவதில்லை! இந்த உலகத்தை உள்ளடக்கிய பிரபஞ்சத்தில் தாமும் ஒரு அங்கம் என்ற தெளிவு ஏற்படுவதில்லை. இந்தத் தெளிவு அறிவில் ஏற்படுகிறது. ஆனால் அது உணர்வோடு கலந்து செயற்படுவதில்லை. இதனை இரட்டைத்தன்மை (Sense of duality) என்பார்கள். இதற்குக் காரணமாக அமைவது ஆசை, பாசம், அவா என்ற அழுக்காறுகளே. இந்த அழுக்காறுகள் நீங்கப்பெற்றால் மனிதனின் செயற்பாட்டிலும் தான் பிரபஞ்ச சொரூபமே என்ற உண்மை நிலை தெளிந்து விடும். இந்த முயற்சியில் ஆத்மாவை ஈடுபடுத்தி உழைப்பனவே சமய வழிகாட்டல்கள் ஆகும்.

ஆத்மா நித்தியமானது. அதாவது அழிவற்றது. ஆனால் உடல் அழிந்துபோய் விடும் தன்மையது. அதுமட்டுமல்ல இந்த உடலின் துணை கொண்டு ஆற்றும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் அவ்வதற்கு ஏற்றாற்போல் பயன்பெறும் நியதிக்குட்பட்டது.

"பொறியின்றி ஒன்றும் உணராத புந்திக்கு அறிவென்ற பேர் நன்று அற" என்பது திருவருட்பயன். தீயவை அல்லது அல்லவை பாவங்கள் என்றும் தூயவை அல்லது துயர் தீர்ப்பவை தர்மங்கள் என்றும் வகுத்து அவற்றின் செறிவினால் ஆத்மா அதற்கேற்ற தகுந்த பயனை அடைகிறது என்றும் சமயங்கள் விளக்குகின்றன. இந்துமதம் உட்பட சில சமயங்கள் இந்த ஆக்கையை நீத்த பின்பும் கூட ஆத்மா தொடர்ந்தும் பல பிறவிகளை எடுத்து வருவதாக மொழிகின்றன. ஆதலால் பிறவி எடுப்பதை அவை பிணி என்றே கூறுகின்றன. இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணியானது ஆத்மாவை மேலான, கீழானபிறவிகளுக்கு இட்டுச் செல்கின்றனவாம்.

தர்மத்தை அதிகரித்த விளைவைப் பெற்றுக்கொள்ளுமோர் ஆத்மா சௌகரியங்களையும் போகங்களையும் மிகவாகவும் அவ்வாறு அல்லாதவை அவதியையும் கஸ்டத்தையும் உறும் நிலையை பெரிதாகவும் எய்துகின்றனவாம். எந்த வகையில் பார்த்தாலும் இவை இரண்டுமே ஆத்மாவுக்கு விமோசனம் பெற்றுத் தராத பிணிகளே.

இப்பிறப்பென்னும் பெரும் பிணியினின்று நீங்கவும் வழியுண்டு என்று இந்துமதம் எடுத்துரைக்கின்றது. அதாவது இருள்சேர் இருவினையும் சாராத் தன்மை உடையோருக்கு பிறப்பெனும் பெரும் பிணி சாரா என்றும் இடித்துக் கூறுகின்றது அத்தோடு அந்நிலையை அடைவதற்கான மார்க்கங்களையும் விபரிக்கின்றன.

நல்ல மனமும் குற்றமற்ற செயற்பாடும் கொண்ட மனிதர்கள் ஆபத்தில் சிக்கிய போதிலும் இறை அருளால் அவர்கள் காப்பாற்றப்பட்டுவிடுவார்கள். நெஞ்சு நிறைந்த வஞ்சகமும் நேர்மையற்ற செயற்றிறனும் கொண்ட மதனிதர்கள் இறைவனின் கருனையினால் தண்டிக்கப்பட்டு திருத்தப்படுவார்கள். இது சாதாரண மனிதனின் அசைக்க முடியாத நம்பிக்கை இந்த நம்பிக்கையின் கோட்பாட்டில் எழுந்த தத்துவங்களே மதங்களாகும்.

ஆத்மா அழிவில்லாதது. இறைவன் அன்பின் வடிவமானவன். அழிவில்லாதவன். ஆத்மா இறைசோதியுள் கலப்பதே பேரின்பம்.

நல்லவர்கட்கும் அப்பாவிகட்குமே நாள்தோறும் பிரச்சினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. அதே வேளை அல்லல் புரிவோருக்கும் தீயோருக்கும் அதிஸ்டம் கிட்டுகிறது என்று பலர் அங்கலாய்ப்பது காதில் ஒலிக்கிறது. இதில் உண்மை இல்லாமல் இல்லை. இந்த உண்மை இலௌகீய நிலை நின்று ஆராயும் போது மட்டுமே சரியானதாக அமைகிறது.

பிறர்க்கின்னா செய்யாமையும் தன்னால் முடிந்ததை பிறர்க்கு உதவியாக நல்கும் உதாரகுணங்களுமே சாதாரணமாக ஒருவரை நல்லவர் என்ற வரைவிலக்கணம் குறித்து எடுத்துரைக்கும். பிறர் நன்மை அடைந்து விடக்கூடாது என்று வஞ்சகமாக சிந்திப்பதும் கொடூரமான செயல்களில் மன மகிழ்ச்சி அடைவதுமான மனிதர்களையே "பாவிகள்" என்ற சொல் விளக்கம் அளிக்கும்.

பிறர்க்கின்னா செய்யாத அருள் நெஞ்சாளர்களுக்கு வாழ்க்கையில் துன்பம் ஏற்படுகிறதே என்று கருதப்படுவது சில சமயம் அவர்கள் ஆசையின் வயப்பட்டு அடையத்துடிக்கும் சில எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமல் ஏமாற்றமாகப் போய்விடுவதனால்தான். இதனை அவர்களுக்கு இறைவன் வழங்குமோர் தண்டனையாகக் கருதமுடியாது பரம்பொருள் அவர்கள் மீது கொண்ட கருணையின் பயனேயன்றி வேறல்ல ஆசை கொள்ளாதிருக்கும் நேர் வழிப் பாதைக்கு அவர்களை இட்டுச் செல்லும் மார்க்கம் இது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆசைதான் பலவித இன்னல்களுக்கும் இறைசிந்தனையற்று வாழ்வதற்கும் காரணகர்த்தா. ஆசையைக் களைந்தாலன்றி அவனியில் ஆன்ம ஈடேற்றமில்லை.

அன்பு, அறம், நீதி, நேர்மை உடையவர்களாக இருந்தாலும் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை வழிப்பாட்டு பாதை தவறி விடுவது இயல்பே. இதனை வாழ்வில் ஏற்படும் ஒரு நேரிடர் (incident) என்றுதான் கூறமுடியும். ஆசையைத் தடுத்து நிறுத்தி அவர்களைத் தொடர்ந்தும் சரியான பாதையில் பயணிக்க வழிகாட்டுவதே நல்லவர் வாழ்வில் இடம்பெறும் துன்பங்களுக்கான மர்மக் காரணமாகும்.

பாவிகளின் வாழ்வில் இன்பம் கிடைப்பதற்குக் காரணம் முற்பிறப்புக்களில் அவர்கள் செய்த நற்கருமங்கள் சஞ்சிதம், பிராரப்தம் என்ற நிலைகளில் மகசூலாகி இப்பிறப்பில் பயனெய்துவதுவேயாகும். அப் பலனை அனுபவித்துக் கொண்டு மனிதப் பண்புகளை மறந்து வாழும் இவர்களை இறைவன் எச்சரிக்கை செய்வதுபோல் சில காரியங்கள் இடம்பெறலாம். அவற்றை எல்லாம் ஊகித்து உணரும் பக்குவம் இவர்களுக்கு இருப்பதில்லை. உழைத்த நற்பயன் முழுமையும் தீர்ந்து விட்ட பின்பு இப்பிறப்பில் அவர்கள் ஆற்றிய துர்ச்செயல்களுக்கான பயனை அனுபவிக்கத் தொடங்கி விடுவர். எந்த வகையில் பார்த்தாலும் ஆத்மாக்கள் தாம் உழைத்த நல்வினைப்பயன்களிலிருந்தோ தீவினைப் பயன்களிலிருந்தோ தப்பி ஓடி விட முடியாது.

இதனால் பிறப்பு என்ற பெரும் பிணி ஆத்மாவைத் தொடர்ந்து வரும். அதனால் வினைப்பயனுக்கேற்ப பிறவிகள் அமையும். ஆகவே ஆத்மாவானது வினைப்பயன்களால் பிறந்து உடல்களை நீத்த வண்ணமே உள்ளது. இந்த அவலத்திலிருந்து ஆத்மா தப்பித்து ஆன்ம ஈடேற்றம் பெறும்வகையில் இந்துமதம் காட்டும் தெளிந்த ஞான அறிவுரை இதுதான்.

நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வகை வினைப்பயன்களும் பற்றிப் பிடியாவண்ணம் பரம்பொருளாகிய இறைவனின் சோதிவடிவில் இரண்டறக் கலந்து விடுவதே அதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அடைவதற்கான மார்க்கம் கூட அழகாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறு?

இருவினையும் சாராநிலை நின்று இறை சிந்தனையில் எப்போதுமாய் இருப்பதொன்றே வழி.

சிந்தனை இறைவனிடம் இருந்தபோதிலும் மனம், மொழி, மெய் என்ற கரணங்கள் தாம் நினைத்தபடியே உழன்று திரியவும் கூடும். அதனால் மனம், மொழி, மெய் என்ற இந்த முக்கரணிகளையும் ஒன்று சேர்த்து இறை சம்பத்துடையவராக இருந்துவரின் பிணிசேர் இருவினைகள் அணுகாமல் தடுக்கலாம்.

அது எப்படி?

சிலர் யோகப் பயிற்சி ஆசனங்களின் மூலம் முயற்சிக்கின்றனர். இம்முறைமை செயற்கையானது. அத்தோடு பாதுகாப்பு அற்றது. வேறு சிலர் விரதம் முதலாய மெய்த்தவங்கள் சிலவற்றை நோற்கிறார்கள்.

எல்லாவற்றிலும் இலகுவானதும் கைகண்டதுமான ஒரு முறைதான் செபம், தியானம், யோகம் ஆகும். மனதிலே இறைவனின் திருவுருவத்தை (அவரவர் விரும்பிய முகூர்த்தம்) நிலை நிறுத்துவதனால் அது ஒடுங்க ஆரம்பித்து விடும்.

நாவிலே இறைவனின் திருநாமம் அல்லது அட்சரத்தை இடையறாது உச்சரித்துக் கொண்டிருப்பதனால் மனம் நிலைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களையும் இவ்வாறு நிலை நிறுத்திக் கொள்வதன் மூலம் உடலால் இறைவனை ஒன்றிணைத்துக் கொள்ளமுடியும். இந்த வழிபாட்டு முறைகள் பலிதமானதும் முக்தி அல்லது ஆன்ம ஈடேற்றம் என்ற பரமானந்த நிலை வந்தடையும். இதற்கு சலிப்பற்ற முயற்சியும் வைராக்கியமுமே மூலதனம். குருவின் துணை இன்றியமையாதது.


பரமானந்த நிலையை அடைந்தவர்கள் வாழ்வில் இன்பம் துன்பம் என்ற விருப்பு வெறுப்பு வேறுபாட்டைத் துறந்தவர்களாக எப்போதும் சிவமயமான பிரபஞ்ச சொரூபத்தை உள்ளும் புறமும் ஒருங்கே கண்டு இன்புற்றிருப்பர். இவர்கள் சீவன் முக்தர்கள் அல்லது சித்தர்கள் எனப்படுவர்.

சாதாரண வாழ்க்கையில் இந்த ஆன்மீக நடைமுறைகளைப் பயிற்சி செய்து ஈடேற்றம் பெற்றுய்ய உலகியல் சூழலில் நாம் நம்மை இணைத்துக்கொண்டுள்ள கட்டுக்கள் அல்லது பந்தங்கள் தடையாக உள்ளன. முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்.

சைவசமய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் கல்லாலின் கீழ் மோனநிலையில் தட்சணாமூர்த்தியாக வீற்றிருந்து சனகர், சனாத்தனர், சனத்தனர், சனாந்தனர் என்ற நான்கு சீடர்களுக்கும் சின் முத்திரை காட்டி செய்தருளும் ஞானோபதேசம் இத்தத்துவத்தையே விளக்குவதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது எமது கைப்படம். சுட்டு விரல் ஆத்மாவையும், பெருவிரல் பதியாகிய பரமாத்மாவையும் ஏனைய மூன்று விரல்களும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் அல்லது பாசக்கட்டினையும் குறித்து நிற்கின்றன. சாதாரண நிலையில் சுட்டுவிரல் தொடக்கம் சின்னிவிரல் வரையான நான்கும் ஒன்று சேர்ந்தும் பெருவிரல் தனித்து வேறாகவும் இருக்கும். சுட்டுவிரலான ஆத்மா இயல்பாகவே மலங்களைப்பற்றிப் பிணித்து அல்லல் உறுவதையும் பேரின்ப பெருவாழ்வு வாழ இறைவனாகிய பெருவிரலோடு இணையவேண்டும் என்பதை சித்தரிப்பதுமே இச்சின் முத்திரைத்தத்துவமாகும்.

சிலர் சைவமதத்தை சைபர் மதம் என்று ஏளனமாகக் கூறுகிறார்கள். இது அவர்களின் ஆற்றாமையினால் விளைந்தது. இருந்தாலும் அதற்கும் கூட இந்து தத்துவத்தில் அர்த்தமுள்ள விளக்கம் உண்டு. உலகம் சைபர் போன்று உருண்டை. வாழ்க்கை சைபர் போன்று சுற்று அல்லது வட்டம் ஆத்மா இறைவனோடு ஐக்கியப்பட்டுவிட்டால் அது பிரபஞ்சம் என்ற சூனியத்தின்தடம்தெரியாத மூலக்கூறு என்ற இன்னோரென்ன பல விடயங்களை இப்படம் எடுத்து விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி.....



திரு நாகம்பர் கணபதிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை தங்கமணியம்மாள் தம்பதியினருக்கு 2வது புத்திரனாக 1946ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 05ம் திகதி ஆரையம்பதியில் பிறந்தார்.

மட்/ஆரையம்பதி இ.கி.மி.த.க. பாடசாலை, மட்/காத்தான்குடி பழைய றோட் அ.மு.ஆ. பாடசாலை ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியையும் மட்/சிவானந்தா வித்தியாலயத்தில் உயர்தரக் கல்வியையும் ஆங்கில மொழி மூலம் கற்றுத் தேறினார்.

1968ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இலங்கை மத்திய எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கல்வித் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், வெளி விவகார அமைச்சு முதலிய அரச நிறுவனங்களில் பணிபுரிந்து 2005ம் ஆண்டு செப்டம்பர் 01ம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றார்.

ரூஸ்யாவின் மொஸ்கோ நகரிலும் லெபனான் நாட்டின் பெய்ரூட்டிலும் அமைந்துள்ள இலங்கைத் தூதரகங்களில் இடைநிலைத்தர முகாமைத்துவ அதிகாரியாக இராஜதந்திர ரீதியான கௌரவத்தோடு எட்டு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றினார். மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியில் 1996/97 காலப்பகுதியில் அதன் இரண்டாவது பதிவாளராக கடமை புரிந்தார்.

இதுவரை இவரால் எழுதப்பட்ட நூல்களும் பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகளும்

| | | |
|---|---|---|
| 01. இதயத் தாமரை (1990) | - | தந்தையரின் நினைவாகப் படைக்கப்பட்ட போதிலும் இதில் பல அரிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. |
| 02. மொஸ்கோ அனுபவங்கள் (20041) | - | இது ஒரு பயன இலக்கிய நூல் |
| 03. ஏற்றமிறக்கம் (2010) | - | சிறுகதைத்தொகுப்பு நூல் |
| 04. நல்வழி (2010) | - | சிறுவர்களுக்கான கவிதை இலக்கிய நூல் |
| 05. ஆரையம்பதி மண் (2012) | - | வரலாற்றில் ஆய்வு நூல் சூடப்பட்ட கௌரவங்கள் |
| 01. கலைஞர் கௌரவ விருது (2010) | - | மண்முனைப்பற்று கலாசாரப் பேரவை |
| 02. சிறந்த நூலுக்கான விருது | - | மொஸ்கோ அனுபவங்கள் : வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு |
| 03. அறிஞர் விருது (2004) | - | அன்பு வெளியீடு சார்பாக அதன் உரிமையாளரும் மூத்த கலைஞருமான அன்புமணி |
| 04. கலாபூஷணம் (2013) | - | இலங்கை கலை பண்பாட்டு அமைச்சு |

– கலாபூஷணம் மூ. அருளம்பலம் –
(ஆரையூர் அருள்)

ISBN 978-955-53426-3-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெஸ்லியா அச்சகம் பிரதான வீதி , ஆரையம்பதி - 065 2051283